பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 25 வியாழக்கிழமை (11.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :258

அரசுக்கு தமிழ்ச்செல்வன் சூளுரை

# தமிழர்கள் கௌரவத்தோடு வாழ்வதற்கான வழிகளைப் புலிகள் கையிலெடுத்தே தீருவர்!

## தடுக்க நினைத்தால் இலங்கைத்தீவு அமைதியாக இருக்காதென எச்சரிக்கை

புதுக்குடியிருப்பு,ஓக.11

**தமிழர்கள் தமது தேசத்திலே இறைமையோடும் கௌரவத்தோடும் வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கான வழிவகைகளை விடுதலைப் புலிகள் தமது கைகளில் எடுத்தே தீருவர். அதனை சிங்கள தேசம் தடுக்க முடியாது. அவ்வாறு தடுக்க முயன்றால் இலங்கைத்தீவு ஒருபோதும் அமைதியாக இருக்கவே முடியாது.**

**- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது கல்வியும் கல்விக்குரிய வளங்களும் கடந்தகாலப் போரால் பெரும் அழிவுகளைக் கண்டுள்ளன. எமது பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன. கல்வி சீர்குலைக்கப்பட்டுள்ளது. எமது மக்களின் மேம்பாட்டை அழிக்கின்ற செயற்பாடுகளை ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளார்கள்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது மனுவை ஹெல உறுமய வாபஸ்பெறும்?

கொழும்பு,ஓக.11

ஜனாதிபதித்தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிக்கக்கோரி ஜாதிக ஹெல உறுமய உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைமீறல் மனு வாபஸ் பெறப்படக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.ஓமல்பே சோபித தேரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த வழக்கில் பிரதிவாதியாக இருப்பதனால் தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிடமுடியாத இக்கட்டான நிலையில் தேர்தல் ஆணையாளர் இருக்கின்றார். இந்த விடயத்தை முக்கிய அரசியல்கட்சிகள் ஜாதிக ஹெல உறுமயவிடம் சுட்டிக்காட்டியதை அடுத்து வழக்கை வாபஸ் பெறுவது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமய தற்போது ஆலோசித்து வருகிறது.

இவ்வாறு வழக்கை வாபஸ் பெற்றால்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றுக்கு நேற்று ஜனாதிபதி திடீர் விஜயம்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடாளுமன்றுக்கு நேற்றுத் திடீர் விஜயம் மேற்கொண்டார். கல்வி ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே அவர் நாடாளுமன்றம் வந்திருந்தார்.

வடக்கு - கிழக்கின் கல்வித்துறையில் பெரும் பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இதனை ஆராய்ந்து தீர்வுகாண்பதற்கான விசேட பேச்சுவார்த்தையொன்றை விரைவில் நடத்தப் போகிறார் எனவும் உறுதியளித்துள்ளார்.

கல்வியமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. கல்வியமைச்சர் என்ற அடிப்படையில் இந்தக் கூட்டத்திற்கு ஜனாதிபதி தலைமை தாங்கினார். கல்வியமைச்சுப் பொறுப்பை ஏற்றபின்னர் இந்தக் குழுவிற்கு ஜனாதிபதி தலைமை தாங்குவது இதுவே முதற்தடவையாகும்.

பிரதிக் கல்வியமைச்சர்களான தினேஷ் குணவர்தன, மங்கள சமரவீர ஆகியோர் உட்பட மேற்படி ஆலோசனைக் குழுவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். வடக்கு - கிழக்கில் கல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் அம்பாறையில் நேற்றுச் சுட்டுக்கொலை!

அம்பாறை,ஓக.11

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் பிரதேசத்தில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போராளிகள் இருவரை வான் ஒன்றில் வந்த சிலர் வழிமறித்துச் சுட்டுக்கொன்றனர் என்று புலிகள் தெரிவித்தனர். வானின் சாரதி பொலீஸ் சீருடை அணிந்திருந்தார் என்றும் அவர்கள் கூறினர்.

திருக்கோயில் சின்னத்தோட்டத்தைச் சேர்ந்தவரான ரமேஸ் (வேலவன், வயது - 32) மற்றும் விநாயபுரத்தைச் சேர்ந்தவரான சுஜீவேந்தன் (வயது - 19) ஆகிய போராளிகளே இந்த சம்பவத்தில் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பாவட்டாவில் உள்ள செயலகத்திலிருந்து அரசியல் பணிக்காக புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தம்பிலுவில் உள்ள மாவட்ட அரசியல் பணிமனைக்குச் சென்றுகொண்டிருந்தபோது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து 500 மீற்றர் தொலைவில், அக்கரைப்பற்று - பொத்துவில் வீதியின் காஞ்சிரக்குடா சந்திக்கு அருகே மோட்டர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போராளி

(16ஆம் பக்கம் பார்க்க)

## எமது அரசியலை முடக்க நினையாதீர் புலிகள் மீது ஜே.வி.பியினர் காட்டம்!

கொழும்பு,ஓக.11

ஜே.வி.பியினரின் அரசியல் நடவடிக்கைகளை முடக்க முயன்றால் பாரிய எதிர் விளைவுகளே ஏற்படும் என்று புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார் அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ. ஜே.வி.பியின் அரசியல் பயணத்தை யாராலும் தடுத்துவிட முடியாது- என்றும் அவர் சூளுரைத்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் புலிகளுக்கு இப்படி எச்சரிக்கை விடுத்தார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் விரவன்ஸ.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தலைமையில் கூடியது. சபாநாயகரின் முன் அனுமதியுடன் விசேட உரையொன்றை நிகழ்த்தினார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர். கந்தளாயில் அமைந்துள்ள ஜே.வி.பியின் அரசியற் செயலகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தமது நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த விஜேசேகரவை குறிவைத்து புலிகளால் மேற்கொள்ளப்பட்டது என்று அப்போது அவர் குற்றஞ்சாட்டினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தில் ஜே.வி.பியின் அரசியல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு புலிகள் கங்கணம் கட்டியுள்ளனர். வடக்கு - கிழக்குப் பகுதியில் தமது ஆயுதப்

(16ஆம் பக்கம் பார்க்க)

### வீரவன்ஸவிடம் பொலீஸார் விசாரணை

கொழும்பு,ஓக.11

சகவாழ்வு மன்றத் தலைவர் குமார் ரூபசிங்கவிற்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இரகசியப் பொலீஸார் நேற்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குமார் ரூபசிங்கவுக்கு அச்சுறுத்தல் விடும் விதத்தில் விமல் வீரவன்ஸ பேசினார் என இரகசியப் பொலீஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந்த விசாரணைகள் இடம்பெற்றன.

இந்த விடயத்தில் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்காக

(16ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த பெண் புலிப் போராளிகள் ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகளின் தோற்றம், அவற்றின் வளர்ச்சி விரிவாக்கம் மற்றும் பெண் புலிகளின் இதுவரையான போர் வெற்றிகள், சாதனைகள் என்பன தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு ஒன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறையின் மகளிர் பணிமனையில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு இந்த மாநாடு இடம்பெற்றது.

போராளி மலைமகள் தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் மூத்த பெண் போராளிகளான செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி, தியாகி திலீபன் நடமாடும் மருத்துவமனையைச் சேர்ந்த தேவா அன்ரி, தளிர்கள் சிறுவர் இல்லப் பொறுப்பாளர் திருமதி தீபா, திருமதி வனஜா, திருமதி பூங்கா, திருமதி தாரணி, தமிழவள் மற்றும் 'சுதந்திரப் பறவைகள்' ஏட்டின் ஆரம்பகால ஆசிரியர்குழு உறுப்பினர் சத்தியபாமா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பெண் புலிகளின் முதலாவது படையணி உருவாக்கப்பட்டு எதிர்வரும் 18ஆம் திகதியுடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அதனை முன்னிட்டே இந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இராணுவ ஒடுக்குமுறைக்குள்ளும், சமூகத்தின் அடக்குமுறைக்குள்ளும் சிக்கியிருந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டைமானாறு ஏரிக்கு அருகில் மீளக்குடியமர படைத்தரப்பு இணக்கம்

யாழ்ப்பாணம்,ஓக.11


பலாலி உயர்பாதுகாப்பு வலயத்துக்கு கிழக்கே தொண்டைமானாறு கடல்நீர் ஏரிக்கு இடைப்பட்ட பகுதியில் உயர்பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட சுமார் 60 ஏக்கர் காணியை மக்கள் மீளக் குடியமர்வதற்கு அனுமதிப்பதற்கு படைத்தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

படைத்தரப்பு மற்றும் புலிகளின் பிரதிநிதிகளுடன் மீனவர் சங்கப்பிரதிநிதிகளும் கலந்துகொண்ட சந்திப்பொன்று நேற்று மாலை யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. அந்தப் பேச்சுக்களின் போதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி இப்பகுதிக்குச் சென்றுவருவ

(16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நேற்றைய தினம் ஆலய முன்றிலில் கூடியிருந்த பக்தர்களில் ஒரு பகுதியினரையும் தேங்காய் உடைத்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கவிதரன்)

# நல்லூர்க் கந்தன் பெரும் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் கூடினர்

யாழ்ப்பாணம்,ஓக.11

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் கொடியேற்றம் இடம்பெற்றது.

குடாநட்டின் பல பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் பக்திப் பரவசத்துடன் திருவிழாவில் கலந்துகொண்டனர்.

அங்கப் பிரதிஷ்டை செய்தும், காவடி எடுத்தும், கற்பூரச் சட்டி ஏந்தியும் அடியவர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

ஆலயச் சூழலில் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், முதலுதவிப் படைப் பிரிவினர், மாநகர சபையினர் எனப் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் தமது சேவையினைச் செய்து வருகின்றனர்.

ஆலயச் சூழலில் உள்ள மடங்களில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அன்னதானம் வழங்கும் பணி திருவிழாக் காலங்களில் தொடர்ந்தும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(9-13-86-111)

## நல்லூரில் நேற்று மட்டும் 13 பவுண் நகை திருட்டு

யாழ்ப்பாணம்,ஓக.11

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய கொடியேற்றத் திருவிழாவான நேற்று மட்டும் 13 பவுண் நகை திருட்டுப்போயுள்ளது. இவை சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியானவை என்று கூறப்பட்டது.

ஆலய உள் வீதியில் கொடியேற்றம் இடம்பெற்றவேளை, இரண்டு தாலிக்கொடிகளும் ஒரு சங்கிலியும் இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு பெண்மணியின் தாலிக்கொடியை அறுத்த மற்றொருபெண்மணி கையும்மெய்யுமாக அடியார்களால் பிடிக்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

தாலிக்கொடியும் மீட்கப்பட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது

நவாலி வடக்கைச் சேர்ந்தவரான ரவி நாகேஸ்வரி என்பவரின் 9 பவுண் நிறையுடைய தாலிக்கொடியும் மற்றும் ஒரு பெண்ணுடைய நான்கு பவுண் சங்கிலியும் திருட்டுப் போயுள்ளன.

இவை சம்பந்தமாக நல்லூர் ஆலய உற்சவ காலப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (9-86)

# கல் உடைக்கும் ஆலைகளை பதிவு செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்.மாவட்ட கல் உடைக்கும் ஆலை உரிமையாளர் சங்கத்தில் அனைத்து ஆலை உரிமையாளர்களும் தமது ஆலை உரிமங்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்று சங்கத்தின் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல் உடைக்கும் ஆலை உரிமையாளர்களின் நலன்கருதி சங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத்தின் மூலம் ஆலை உரிமையாளர்களின் தனித்துவம், ஒற்றுமை போன்றவற்றை நிலை நாட்டுதல் தரமான கல் விநியோகங்களை மேற்கொள்ளுதல், பிற கல் உற்பத்தி மேற்கொள்வதற்கான ஒழுங்கு முறைகளை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தச் சங்கத்தில் இணைந்து உரிய பலன்களைப்பெற ஆலை உரிமையாளர்கள் முன்வர வேண்டும்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-204)

# கல்வித்துறையில் நிலவும் வெற்றிடங்களை டிசெம்பருக்குள் நிரப்ப ஜனாதிபதி பணிப்பு

கல்வித்துறையில் நிலவும் சகல வெற்றிடங்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நிரப்பப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தப் பணிப்புரைக்கு அமைய கல்வித்துறையில் நிலவும் வெற்றிடங்கள் யாவும் அதனுடன் சம்பந்தப்பட்ட சட்டமூலத்திற்கமைய நிரப்பப்படும் என அரச தகவல் திணைக்களத்தின் மத்திய தகவல் மற்றும் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைகல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் கல்விச் சேவை, இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை என்பவற்றில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கே தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தற்போது 200 வெற்றிடங்கள் நிலவுகின்றன. தற்போது ஐவர் மட்டுமே சேவையில் உள்ளனர் எனத் தெரிவித்துள்ள தகவல் திணைக்களம், இவ்வெற்றிடங்கள் மூன்று கட்டங்களாக நிரப்பப்படவுள்ளன என்றும் கூறுகின்றது. முதற்கட்டமாக 28 பேருக்கான நியமனத்திற்கு அரச சேவை ஆணைக்குழு அங்கீகாரம் அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கென கடந்த வருடம் நவம்பர் மாதம் கல்வி அமைச்சு வெளியிட்ட இரண்டாம் வகுப்பு அதிகாரிகளின் சேவை மூப்பு பெயர்ப் பட்டியல் தயார் நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 12 வருடங்களின் பின்னர் கல்வி நிர்வாக சேவையில் 3 ஆம் வகுப்பு அதிகாரிகளை இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

# தமிழர் பிரச்சினையை ஸ்ரீலங்கா அரசுக்கு புரியும் மொழியில் விரைவில் சொல்வோம்

## தற் பாதுகாப்பு பயிற்சி ஆரம்ப நிகழ்வில் பாப்பா சூளுரை

கிளிநொச்சி,ஓக.11

தமிழர் பிரச்சினைகளை ஸ்ரீலங்கா அரசு புரிந்துகொள்ளும் மொழியில் விரைவில் அதற்கு பதில் அளிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா.

தமிழீழத்தைக் காக்கும் தற்காப்புப் பயிற்சி நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பளை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. பயிற்சிக்கெனத் திரண்டிருந்த ஐயாயிரம் வரையிலான பயிற்சியாளர்கள் மத்தியில் பாப்பா மேலும் கூறியதாவது:-

எமதுமூத்த அரசியளாளர்களும் எமது அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர்களும் மற்றும் மக்களும் எமது பிரச்சினைகளை சக உபாயங்கள் ஊடாகச் சிங்கள தேசத்திற்கு தெளிவுபடுத்த விளைந்திருக்கின்றனர். எனினும், சிங்களவர்கள் அதனை உணர்ந்துகொண்டதாக தெரியவில்லை. எனவே, அவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய மொழியில் விரைவில் பதில் அளிக்கப்படும்.

தற்போதைய அமைதிக்காலம் என்பது சிங்களவர்களின் கருணையினால் ஏற்பட்ட ஒன்றல்ல. எமது யுத்த திறனும் மக்களின் அர்ப்பணிப்பும் மாவீரர்களின் தியாகமுமே இந்த நிலையை தோற்றுவித்தன.

பலம் எங்கள் பக்கம் இருப்பதனால் எங்களை இனியும் ஏமாற்ற முடியாது. எமது மக்களாகிய உங்களின் உணர்வுகளையும் ஆணையையும் தலைவர் சரிவரப் புரிந்துகொண்டுள்ளார் - இப்படி பாப்பா தெரிவித்தார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடரினை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர், மாவட்ட மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக்கொடியினை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். உறுதிஉரை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து போர் பயிற்சி ஆசிரியர் சோழ நிலவன் பயிற்சிகளை நெறிப்படுத்தினார்.

(எ-9-301)

# தமிழர்கள் கௌரவத்தோடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தைத் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது மட்டுமல்ல அவர்களின் மனித வாழ்விற்கு அடிப்படையாக இருக்கின்ற ஆதாரங்களை அழித்தொழிப்பதிலும் சிங்கள தேசம் கவனம் செலுத்திவந்துள்ளது.

தமிழ் மக்களின் கல்விச் செயற்பாடுகளை சீர்குலைப்பதில் ஆட்சியாளர்கள் முக்கியமாக கவனஞ்செலுத்தி வந்துள்ளார்கள். ஆரம்பகால கட்டங்களில் தரப்படுத்தல்களை கொண்டுவந்து எங்கள் தலைமுறையின் கல்விச் செயற்பாடுகளை சீர்குலைத்தார்கள்.

நாம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறோம். அரசினால் எமது பகுதிகளுக்கு அனுப்பப்படும் பொருள்களில் பாரபட்சம் காட்டப்படுகிறது. இது எமது தலைமுறையின் வளர்ச்சிக்கு பாதகமாக உள்ளது. புலம்பெயர்ந்த உறவுகள் எமது தாயக மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வருகிறார்கள். எமது தலைவருடைய காலத்திலேயே தமிழர்கள் நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம்.

விடுதலையை நோக்கி நாம் விரைந்து கொண்டிருக்கிறோம். எமது தாயகப் பிரதேசத்தில் பெருமளவு நிலப்பரப்பை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுத்து பாதுகாத்து, நிர்வாகங்களை கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறோம். தாயகத்தின் முக்கிய பகுதிகள் எதிரிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் கூட எல்லைக் கிராமங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளன.

எமது தேசத்தை அழித்து இலங்கைத் தீவை பௌத்த நாடாக உருவாக்க முனைந்த சிங்கள பேரினவாதத்திற்கு எமது தலைவரின் தலைமையில் சாட்டையடி கொடுத்து எமது மண்ணைப் பாதுகாத்து வருகிறோம். எமது மக்கள் நிறைவாக வாழக்கூடிய சூழலை எமது மண்ணிலே உருவாக்கி வருகிறோம். ஏனைய நிலப்பகுதிகளும் மீட்டெடுக்கப்படும்போதுதான் எமது கட்டமைப்புகள் நிறைவுபெறும்.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக அமைதி முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கவேண்டியவர்களாக உள்ளனர். அமைதி வழியில் எமது உரிமையைப் பெற்றெடுக்க நாம் முயன்றோம். ஆனால், சிங்களதேசம் சகல நடவடிக்கைகளையும் புறக்கணித்து விரக்தி ஏற்படும் சூழலுக்கு மக்களைத் தள்ளியுள்ளது.

இந்நிலையில் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு முடிவெடுக்கவேண்டியவர்களாகவுள்ளோம். எமது மண்ணில் சுதந்திரமாகவும், அமைதியாகவும் வாழும் அடிப்படை உரிமையைத்தான் நாம் கேட்கிறோம். இவற்றை சிங்களதேசம் நிராகரிக்க முடியாது. அப்படி முனைந்தால் எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எமது தலைவரின் தலைமையில் எமது மக்கள் அணிதிரண்டு முயற்சிகளில் ஈடுபடுவார்கள்.

பத்திரிகைச் செய்தியொன்றில் ஸ்ரீலங்கா கடற்படை அதிகாரியொருவர், தாம் பலவீனமான சமாதானத்தை விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். அப்பலவீனமான சமாதானம் எது என்பதுதான் எமது கேள்வி. இன்னொரு அரச உயரதிகாரி தெரிவிக்கிறார், இலங்கையினுடைய இறைமையை தாங்கள் பாதுகாக்க வேண்டும் என்று. இலங்கையினுடைய இறைமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க என்ன விலையாவது கொடுக்க தயாராகவுள்ளார் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

சிங்களதேசம் சொல்கிற இறைமையென்பது என்ன? தமிழ் மக்களுடைய வாழ்வுரிமையை இல்லாதொழிப்பதும், ஆக்கிரமிப்பை மேற்கொள்வதும் தான் சிங்கள தேசத்தின் இறைமையா?

இலங்கைத் தீவு அமைதிப் பூங்காவாக திகழவேண்டுமானால், தமிழர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். சிங்கள தேசம் தனது இறைமையைப் பாதுகாப்பதற்கோ, சிங்கள மக்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கோ நாம் இடையூறாக இருக்கமாட்டோம். ஆனால், எங்கள் தேசத்தில் எங்களுடைய மக்கள் இறைமையோடும் கௌரவத்தோடும் வாழும் சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கான வழிகளை எமது கையில் எடுத்தே தீருவோம். இதை ஒருபோதும் சிங்களதேசம் தடுக்கமுடியாது. தடுக்க முனைந்தால் இலங்கைத் தீவு ஒருபோதும் அமைதிப் பூங்காவாக இருக்கமுடியாது. சிங்களதேசம் தமது இறைமையைப் பாதுகாத்துக்கொண்டு மகிழ்வாக இருக்கவேண்டுமானால், தமிழ் மக்களது இறைமை, உரிமை, வாழ்வு என்பவற்றை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களது இறைமைக்காக - நல்வாழ்வுக்காக எமது தலைவர் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து தமிழ் மக்களுக்கு தலை நிமிர்வை ஏற்படுத்தியுள்ளார். பலமான மக்கள் இனமாக நாம் உருப்பெற்றுள்ளோம். தமிழ் மக்களின் பலமான நிலையால்தான் சிங்கள தேசம் அமைதி வழிக்கு வந்தது.

தற்காலிக அமைதிச் சூழலை ஒரு பொறியாக வைத்துக்கொண்டு எமது மக்களின் போராட்ட பலத்தை சிதறடிப்பதில் அரசு தீவிரமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.இன்றுகூட செய்திகள் வெளியாகின. ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை அரசு களைய மாட்டாதாமென்று. அரசு எப்படி ஆயுதங்களைக் களையும்? ஆயுதங்களை ஏந்த வைத்திருப்பவர்கள் அவர்கள் தானே.

இலங்கைப் படைக்குள் தெரிவுசெய்யப்பட்டவர்களை வைத்துக்கொண்டுதான் ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன. இவ் ஆயுதக் குழுக்களினால் போராளிகள், மக்கள் கொல்லப்படுகிறார்கள். யுத்த சூழலை உருவாக்குவதில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

நிழல் யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அடுத்த கட்டத்திற்கான தீர்மானத்தை விரைந்து எடுக்கவேண்டிய நிலையில் தமிழினம் உள்ளது - எனவும் தெரிவித்தார்.

(எ-க-9-190-353)

# புதிய அரசியலமைப்பை தயாரிப்பதில் ஈராக்கியத் தலைவர்கள் தீவிர முயற்சி

ஈராக்கில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பது அவசியமாகும். இந்தப் புதிய அரசியல் யாப்பை சமர்ப்பிப்பதற்கான காலஎல்லை முடிவடைய இன்னும் 6 நாள்களே இருக்கும் நிலையில் அதனைத் தயாரிப்பதில் ஈராக்கியத் தலைவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கில் பல பகுதிகளிலுள்ள தலைவர்களையும் ஜனாதிபதி ஜலால் தலபானி வரவேற்று உரை நிகழ்த்துகையில் ஏற்கனவே நடத்தப்பட்ட பேச்சுகளின் அடிப்படையில் சமஷ்டி அமைப்பு மற்றும் எண்ணெய் வளத்தைக் கட்டுப்படுத்தி வருமானத்தை விநியோகித்தல் போன்ற அம்சங்கள் ஆராயப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

6 நாள்களுக்குள் புதிய அரசியல் யாப்பைத் தயாரித்துவிட முடியும் எனத் தங்கள்பூரண நம்பிக்கை கொண்டுள்ளார் என ஜனாதிபதிப் பேச்சாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

இருந்தபோதிலும் ஈராக்கில் பல பகுதிகளில் இடம்பெற்றுவரும் வன்செயல்கள் காரணமாக நேற்று 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

பக்தாத் முதல்வரின் அலுவலகத்தினுள் பிரவேசித்த 120 துப்பாக்கிதாரிகள் அவரை பதவியிலிருந்து அகற்றி நகர ஆளுநர் ஹுசைனைப் புதிய முதல்வராக நியமித்துள்ளனர்.

ஷியா முஸ்லிம்களும் குர்திஷ்களும் வன்செயல்கள் அற்ற அமைதியான அரசியலை நடத்த முன்வரும்படி சுனி முஸ்லிம்களுக்கு அழைப்பு விடுத்தபோதிலும் அரசைக் கவிழ்பதையே சுனி முஸ்லிம்கள் இலக்காகக் கொண்டுள்ளனர்.

அவர்கள் கிளர்ச்சிவாத நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் திட்டமிட்டு நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

## ஜப்பான் பிரதமருக்கு மக்கள் ஆதரவு வீழ்ச்சி

ஜப்பான் பிரதமர் மீதான ஆதரவு தற்போது படிப்படியாகக் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் பொதுத்

உலக அரங்கில்

தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ள அவர் மீதான மக்களின் ஆதரவு குறித்து அறிந்துகொள்ள நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே இந்த விடயம் தெரிய வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், ஜப்பானில் நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில் அந்த நாட்டில் 46 வீதமாக கொய்சுமிக்கு இருந்த ஆதரவு 41 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் -

மற்றுமொரு கருத்துக் கணிப்பில் 46 வீதமாக இருந்த அவருக்கான ஆதரவு 37 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# சீக்கியர்கள் டில்லியில் ஆர்ப்பாட்டம்



நானாவதி கமிஷன் அறிக்கையின்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி யும் மத்திய அரசிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஜம்மு - காஷ்மீரில் சீக்கியர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுடில்லி,ஓக.11

சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் தொடர்பான நானாவதி அறிக்கையின்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டில்லியில் சீக்கியர்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் 1984இல் நடந்த கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் கலந்துகொண்டனர். அவர்கள் மத்திய அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். மேலும், நானாவதி அறிக்கை மீது மத்திய அரசு தாக்கல்செய்த நடவடிக்கை அறிக்கையையும் அவர்கள் தீ வைத்துக் கொளுத்தினர்.

இதுகுறித்துச் சீக்கிய கூட்டமைப்புத் தலைவர் ஜி.எஸ்.பாப்பெர் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:-

நானாவதி அறிக்கையில் தற்போது மத்திய அமைச்சராக இருக்கும் ஜகதீஷ் டைட்லர் மற்றும் 70இற்கும் மேற்பட்ட பொலீஸார் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால், இவர்கள் மீது மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

21 வருடங்களாக நீதி கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால், மத்திய அரசு குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நானாவதி அறிக்கை மீது மத்திய அரசு தாக்கல் செய்துள்ள நடவடிக்கை அறிக்கை வெறும் கண்துடைப்பு அறிக்கையாகும் - என்றார். (8)

# குளோனிங் முறையில் பன்றி



பெண் பன்றியின் காதுப்பகுதிகளிலுள்ள செல்களை எடுத்து குளோனிங் முறையில் பன்றிக் குட்டியை உருவாக்கியுள்ளனர் சீனாவின் ஹைனான் மாவட்ட மருத்துவர்கள்.

இதுபற்றி அந்த விஞ்ஞானிகள் கூறும்போது, குளோனிங் மூலம் 3 பன்றிக்குட்டிகள் உருவாக்கப்பட்டன. கடந்தவாரமே இந்த 3 குட்டிகளும் பிறந்தன. ஆனால், அவற்றில் 2 குட்டிகள் இறந்துவிட்டன. மீதி உள்ள குளோனிங் பன்றிக்குட்டி 1.3 கிலோ எடையுள்ளது. அது நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறது.

உடல் உறுப்புகள் மாற்றுச் சிகிச்சைக்கு இந்த குளோனிங் ஆராய்ச்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பன்றியின் பல உறுப்புகளை மனிதர்களுக்குப் பொருத்தமுடியும் என்று தெரிவித்துள்ளனர்.

குளோனிங் பன்றிக் குட்டியை ஏற்கனவே பிரிட்டன், ஜப்பான், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென்கொரியா ஆகிய நாடுகள் உருவாக்கியிருக்கின்றன.

உடல் செல்களை எடுத்து அதன் மூலம் தாயைப் போலவே புதிய உயிரிணங்களைக் குளோனிங் முறைமூலம் உருவாக்குவதில் விஞ்ஞானிகள் தீவிரம் காட்டிவருகிறார்கள். (8)

# ‘டிஸ்கவரி’ பயணம் வெற்றி: நாஸா விஞ்ஞானிகள் மகிழ்ச்சி

2003ஆம் ஆண்டு அமெரிக்கா விண்ணுக்கு ஏவிய ‘கொலம்பியா’ விண் ஓடம் பூமிக்குத் திரும்புகையில் விபத்துக்குள்ளானதன் பின்னர், முதன் முறையாக விண்ணுக்கு ஏவப்பட்ட ‘டிஸ்கவரி’ நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக பூமியில் தரையிறங்கியது. கட்டுப்பாட்டு அறையிலிருந்து கண்காணித்துக்கொண்டிருந்த ‘நாஸா’ விஞ்ஞானிகளின் ‘டிஸ்கவரி’ விண் ஓடத்தின் பயணம் வெற்றிகரமாக நிறைவடைந்ததின் மகிழ்ச்சியைப் பெரும் ஆரவாரத்துடன் பகிர்ந்து கொண்டனர்.

விண்வெளியில் இருவாரகாலம் இருந்த பிறகு 7 விண்வெளி வீரர்களுடன் நேற்றுமுன்தினம் மாலை இந்திய நேரப்படி 5.42 மணிக்கு, கலிபோர்னியாவிலுள்ள எட்வர்ட்ஸ் விமானப் படைத்தளத்தின் 4.8 கி.மீ., நீள ஓடு பாதையில் ‘டிஸ்கவரி’ பத்திரமாகத் தரையிறங்கியது.

பூமிக்குத் திரும்பியதில் மகிழ்ச்சியடைகிறோம் என ‘டிஸ்கவரி’ கொமாண்டர் எலீன் காலின்ஸ் முதலில் கட்டுப்பாட்டு மையத்தை தொடர்புகொண்டு தெரிவித்தார்.

‘வியப்புக்குரிய சோதனைப் பயணத்தை முடித்துக்கொண்டு திரும்பியுள்ள உங்களுக்கு வாழ்த்துக்கள்’ எனப் பாராட்டிய கட்டுப்பாட்டு மைய கொமாண்டர், விண்வெளி வீரர்கள் ஒவ்வொருவரையும் பெயர் குறிப்பிட்டு வருக! நண்பர்களே வருக! என வரவேற்றார்.

நாங்கள் செவ்வாய்க்கிழமை நிச்சயம் பூமியில் கால் பதிப்போம் என ‘டிஸ்கவரி’ விஞ்ஞானி வெண்டி லாரன்ஸ் கட்டுப்பாட்டு மையத்துடன் பேசுகையில், தெரிவித்த நம்பிக்கை நிறைவேறியது.

கடந்த ஜூலை மாதம் 26ஆம் திகதி இந்த விண்வெளி ஓடத்தை அமெரிக்காவின் ‘நாஸா’ அமைப்பு ஏவியது. விண்வெளிக்குச் சென்றதும் அங்கு இயங்கிவரும் சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்துடன் இணைக்கப்பட்டது ‘டிஸ்கவரி’.

கொலம்பியா விபத்துக்குப் பிறகு உருவாக்கப்பட்ட புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பல்வேறு பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொண்டனர். இப்பணிகள் நிறைவுற்ற பிறகு பூமிக்குத் திரும்புவதன் முதல்படியாக சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திலிருந்து டிஸ்கவரி சனிக்கிழமை பிரிந்தது. பிறகு பூமிக்குள் நுழையத்தக்க கோணத்தில் ‘டிஸ்கவரி’ நிலை நிறுத்தப்பட்டது.



பத்திரமாகத் தரையிறங்குமா என்ற அச்சமும் கவலையும் கொண்டிருந்த உலக மக்களுக்கும் அமெரிக்காவுக்கும் ‘டிஸ்கவரி’யின் பாதுகாப்பான வருகை பெரும் மகிழ்ச்சியை வாரி வழங்கியது.

புளோரிடாவின் கெனடி விண்வெளி மையத்திலுள்ள தளத்தில் கடந்த திங்கட்கிழமை ‘டிஸ்கவரி’ தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், தளம் அமைந்துள்ள பகுதியே தெரியாதவாறு படர்ந்திருந்த மேகமூட்டம், மோசமான வானிலை காரணமாகத் தரையிறங்குவது செவ்வாய்க்கிழமைக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

ஆனால், செவ்வாய்க்கிழமையும் கெனடி விண்வெளித்தள மையத்தில் வானிலை தொடர்ந்து மோசமாக இருந்ததால் தரையிறங்கும் இடம் கலிபோர்னியாவிலுள்ள எட்வார்ட்ஸ் விமானப்படைத்தளத்திற்கு மாற்றப்பட்டது. இதையடுத்து, நிலைநிறுத்தப்பட்டிருந்த டிஸ்கவரி மணிக்கு 27,360 கிலோமீற்றர் வேகத்தில் பயணஞ்செய்து காற்று மண்டலத்துக்குள் நுழைந்து, பின்னர் வேகத்தைக் குறைத்து எட்வர்ட்ஸ் விமானப்படைத்தளத்தின் ஓடு பாதையைத் தொட்டுத் தரையிறங்கியது. (8)

# வன்னி வள நாட்டில் கல்விக் கண் திறக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி இந்த ஆண்டு பொன் விழா காணுகிறது. பொன் விழாச் சிறப்பு நிகழ்வுகள் தற்போது நடைபெறுகின்றன. இதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் முக்கிய நகராக விளங்குவது புதுக்குடியிருப்பு. வளம் கொழிக்கும் இந்த நகரில் கல்விக்குக் கலங்கரை விளக்கமாக மிளிர்வது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

15.01.1955 இல் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் ஆரம்பித்தனர். இது 1964ஆம் ஆண்டு மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. 1978ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவும் தொடங்கப்பட்டது. கல்வி உட்பட அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் இப்பாடசாலை இவ்வருடம் தனது பொன்விழாவைக் கொண்டாடும்போது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி என்ற பெயர் பெற்று ஒளிர்கிறது.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது மு.நேசரத்தினம் அதிபராகச் சேவையாற்றினார். அமரர் கு.வி.செல்லத்துரை அதிபராக இருந்தபோது மகாவித்தியாலயமாகவும் தற்போது பெ.க.சிவலிங்கம் அதிபராகப் பணியாற்றும் வேளையில் கல்லூரியாகவும் படிப்படியாக வளர்ந்து பொன் விழாக் காணுகிறது.

பல்கலைக்கழக அனுமதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னணியில் திகழும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் மாணவர்கள் விளையாட்டுத்துறையிலும் சளைத்தவர்கள் இல்லை.

1981ஆம் ஆண்டில் மனித உரிமைகள் தொடர்பாக நடத்தப்பட்ட வினாடிவினாப் போட்டியிலும் -

2003 ஆம் ஆண்டு நாடகப் போட்டியிலும் - இப்பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுப் பெருமை சேர்த்தனர். இப்பாடசாலை மாணவரான ச.நிரஞ்சன் இவ்வாண்டு தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் 400 மீற்றர் ஓட்டத்தில் விருதைப் பெற்றார். அத்துடன் அவர் தென்கொரியாவில் நடைபெறும் அனைத்து சமூகங்களுக்கும் மதங்களுக்குமான விளையாட்டு விழாவில் பங்கேற்று பாடசாலைக்கு மட்டுமல்லாமல் தமிழர் தாயகத்துக்கே புகழ் சேர்க்கிறார்.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் கோரப் பிடிக்குள் தமிழர் தாயகம் அல்லற்பட்டவேளை இந்தப் பாடசாலையும் ஓலைக் கொட்டிலில் இயங்கும் நிலையேற்பட்டது. இவ்வாறு சுமார் 15 ஆண்டுகள் இன்னலின் மத்தியிலும் கல்விக் கண்ணைத் திறப்பதில் சளைக்காது ஈடுபட்டது இப்பாடசாலை.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் நிக்கொட், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிதியுதவியுடன் ஆய்வுகூடம், நூலகம் மற்றும் வகுப்பறைக் கட்டடங்கள் ஆகியவற்றுடன் விளங்குகிறது.

பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சபையும் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்கு அயராது உழைக்கின்றன. இப்பாடசாலை மாணவர் ஒருவரின் பெற்றோர் 33 ஏக்கர் நிலத்தை அன்பளிப்பாக வழங்கியமையும் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளையினர் 10 லட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம் அமைத்தமையும் பிரிட்டன் கிளையினர் தண்ணீர் தாங்கி, சுற்றுமதில், கலையரங்கு போன்றவற்றை பல லட்சம் ரூபா செலவில் அமைத்தமையும் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

**க.விக்னேஸ்வரன்**
**புதுக்குடியிருப்புச் செய்தியாளர்**

இத்தனை பெருமைமிக்க புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன் விழா நிகழ்வுகள் தற்போது நடைபெறுகின்றன.

இதில் சிறப்பு நிகழ்வுகளாக கலையரங்கத் திறப்பு விழா, பொன் விழா மலர் வெளியீடு ஆகியவை இடம்பெறுகின்றன.


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு
யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள சிசில் (Sisil) குளிர்சாதனப் பெட்டியும் Ken wood Electric Cooker (2 Barners) With oven (1/2 Size) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:T.P.No. 0779163439 (38635)

### ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப்பலன்களை அறிந்து கொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒரு முறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (38710)

### திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் உள்ளன. உங்கள் பிள்ளைகளின் வளமான வாழ்வுக்கு ஏற்ற மணமக்களைத் தெரிவுசெய்ய எமது திருமண சேவையை நாடுங்கள். தொடர்பு: த.சிவானந்தன் (பிரபல சோதிடர்), இல.264, பலாலி வீதி, கந்தர்மடம். (38693)

### வீடு தேவை

3 பேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P.No. 0779064198. (38660)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப U.K. யில் வேலை பார்க்கும் நிரந்தர குடியுரிமையுடைய 30 வயது இடபராசி, இடபலக்கினம் உடைய செவ்வாய்க் குற்றமற்ற 32 பாவமுடைய மணமகனுக்கு படித்த அழகான மணப்பெண் தேவை. பெண் உயரம் 5'4'' மேல் இருத்தல் வேண்டும். விரும்புபவர்கள் குடும்பவிவரம் ஜாதகம், படம் அனுப்பவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும். தொடர்பு: இல.2665 மே/பா உதயன். (38675)

### தவறிவிட்டது

மறவன்புலவு சாவகச்சேரியைச் சேர்ந்த சண்முகநாத ஐயர் மாதுளன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.830820574V) யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். 0777 110874. (38682)

### அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நூல்கள்

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. ஒரு காதலின் கதை நாவல் 2.யாழ்ப்பாணம் சிறுகதைகள் 3.யாழ்ப்பாணமா? கொழும்பா? 4.எங்கள் நாடு 5.இமயம் நவீன நாடகங்கள் 6.வானொலி நாடகம் எழுதுவது எப்படி? சிறுகதை எழுதுவது எப்படி? (38673)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறி ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (C/44496)



COMITE INTERNATIONAL GENEVE

## ICRC Jaffna Requires Temporary Staff

The ICRC Jaffna requires a number of temporary field workers to assist with one of its ongoing programmes. The Job will primarily involve interviewing people in their homes.

Minimum requirements:

- Basic written and Spoken English
- Advance Level studies/qualified
- Well spoken and personable
- Good problem solving skills

All interested parties should send a copy of their Resume to ICRC Jaffna complete with telephone contact details.

**ICRC Jaffna**
120 Temple Road,
Jaffna.

(C-44005) (21-15-45)


### தேவை

Canon 1215 அல்லது வேறு தொடர் இலக்கம் உள்ள Canon வகை Photo Stat இயந்திரம் தேவை. வைத்திருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 077 3164320, 0773256575. (C/44006)

## தனியார் பஸ்களின்வேலை நிறுத்தத்தால் விளைந்த இன்னல்

கொழும்பு, ஓக.11

தனியார் பஸ்சேவை நிறுத்தத்தினால் நேற்றுமுன்தினம் தொங்கிக்கொண்டு பயணம் செய்த ஒருவர் கொட்டாவையில் தவறி விழுந்ததில் ஒருகாலை இழந்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

அத்தோடு, நேற்று முன்தினம் சேவையில் ஈடுபட்ட போக்குவரத்துச் சபை பஸ்களில் தொங்கியபடி பயணித்தவர்களில் நேற்று முன்தினம் மாலை வரை நான்கு பயணிகள் காயமுற்று கொழும்பு தேசிய வைத்திய சாலையில் விபத்துச் சேவைப் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

நெருங்கியபடியும் தொங்கியபடியும் சென்ற சனங்களுக்குள் நசுங்குண்ட பெண்கள் பலர் மயங்கி விழுந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

### உடன் தொடர்பு கொள்ளவும்

**யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய பவளவிழா மலர் வெளியீடு**

எமது யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய பவள விழாவை முன்னிட்டு மலர் ஒன்று வெளியிட உத்தேசித்துள்ளோம். ஆகவே, இந்த வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் தேவைப்படுகின்றன.

இது பற்றிய விவரம் தெரிந்தோர், சம்பந்தப்பட்டவர்கள் 30.08.2005 ஆம் திகதிக்கு முன்னதாக அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர், யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயம், சுழிபுரம். (38714)(21-15-45) செயலாளர் மலர்க்குழு.

### கண்ணீர் அஞ்சலி



எங்கள் அன்புக்குரிய அதிபர் திரு.வாமதேவன் (யா/இராமகிருஷ்ண வித்.கோண்டாவில்) அவர்களின் அன்பு மகள்

**செல்வி கீர்த்தனா**

கடந்த 08.08.2005 இல் அகாலமரணமடைந்ததனால் நாம் அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அத்துடன் அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

A.T.C INSTITUTE, INUVIL. (38715)(21.15.45) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

### கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 02 - 02 - 1977



இறைவன் அடியில் 08 - 08 - 2005

**அமரர் தருமராசா சிவானந்தம்**

அன்பின் பிறப்பிடமே - எம் நெஞ்சில்
அணையாத ஒளிவிளக்கே!
ஈசன் திருவடிக்கு வெகு
சீக்கிரமாய்ச் சென்றதேனோ?
எத்தனை இழப்புக்கள் - எம்
வாழ்வில் கண்டிருப்போம்
அத்தனைக்கும் அசையாத
ஆலமரமாய் நின்றோம்
உன் பிரிவுச் செய்தி கேட்டவுடன்
நாங்கள் சடமானோம்
அன்று... போதை கொண்ட
கொலைஞர் கொட்டம் உனைக்
கொன்றதே

இடைக்காடு கலைமகள் ச.ச.நிலையத்தினர்.

இடைக்காடு, அச்சுவேலி. (38711)(21-15-45)

### நிஜமொன்று நிழலாகி மூன்று திங்கள்

**90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்தி வழிபாட்டு அழைப்பும்**

மண்ணில் 1986 - 02 - 03



விண்ணில் 2005 - 05 - 15

**செல்வி அமிர்தலிங்கம் நர்மதா**

15.05.2005 அன்று இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியில் எம்பெருமான் திருவடிகளில் சேர்ந்த எங்கள் அன்புச் செல்வத்தின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டோருக்கும், அவ்வேளையில் எமது இல்லத்திற்கு விரைந்து வந்து பல வழிகளில் எமக்கு உதவி, ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் நேரிலும் தொலைபேசி, தபால் மூலமும் எம்மோடு துயரைப் பகிர்ந்து கொண்டோருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (12.08.2005) வெள்ளிக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்தி வழிபாட்டிலும் அதைத் தொடரவுள்ள மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு, எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

தேவாலய வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (38706)(21-15-45)

## மரண அறிவித்தல்கள்

### தருமராசா சிவானந்தம்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா சிவானந்தம் (ஆங்கில ஆசிரியர்) அவர்கள் 08.08.2005 திங்கட்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் தருமராசா - ஜீவபாஸ்வரி தம்பதியரின் மகனும் வஜிதா (ஜேர்மனி), சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பரமானந்தம் (ஜேர்மனி), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஞ்சயனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு சாமித்திடல் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானியார் வளவு, இடைக்காடு. (38658)(21-15-45) தகவல்: குடும்பத்தினர்.

### கந்தப்பர் சண்முகம் கந்தசாமி

(ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பர் சண்முகம் கந்தசாமி அவர்கள் 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சர்வேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பர் சண்முகம் - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற குருகுலசிகாமணி- அரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற முத்துவேலு, பாலசுப்பிரமணியம் மற்றும் குமாரசாமி (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோ தரனும், மகேஸ்வரி, மாணிக்கம், ஈஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கங்காதரன், மகாதேவன், ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆனந்தி, தயானந்தி, சுகுமார், சுகந்தி, ஜெயந்தி,லஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிரஞ்சன், ஜீவானந்தன், சந்திரிக்கா, ஐங்கரன், காந்தரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிராமி, ஆகவி, நிரோன், மதுசன், விதுரன், சிறிராம், காயத்திரி, பிரசாந், ஜனனி, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை டென்மார்க்கில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P.: 004598389993
0016088291167
0019058744735
00442086052178
00442086481108

தகவல்; க.சுகுமார் (மகன்) (கனடா).

(38704)

### திருமதி குருசுமுத்து ஞானம்மா [செல்லம்]



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம் என அன்பாக அழைக்கப்படும் திருமதி குருசுமுத்து ஞானம்மா அவர்கள் 09.08.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருசுமுத்துவின் அன்பு மனைவியும் ஜெயமலர், றெஜினா, மரியகுமார், பொன்கலன் (பிரான்ஸ்), பொன்ராசா (சுவிஸ்), மரியசேவியர் (குஞ்சு), சந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் மரியதாஸ், அந்தோனிப்பிள்ளை, எலிசபெத், மரியசோதி, ரேணுகா, எமல், புனிதம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அன்னம்மா (சுண்டுக்குழி), இராசம்மா, ஞானம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற ஞானப்பு, பொன்னுத்துரை மற்றும் நேசம், வரப்பிரகாசம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க இரங்கல் திருப்பலி இன்று (11.08.2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி பரலோக மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் நீர்வேலி பரலோக மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பரலோக மாதா கோயிலடி, நீர்வேலி. (38718) (39.21.45.15) தகவல்: பிள்ளைகள்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# போர் நிறுத்த உடன்பாடு நீடிக்குமா?

இலங்கையில் இப்போது அரசியல் ஸ்திரமற்ற நிலை நிலவுகிறது. அதனால், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள், முன்னெடுப்பு எதுவுமின்றித் தடைப்பட்டுப் போயுள்ளன.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஊக்கியாகச் செயற்படும் பொறுப்பை ஏற்ற நோர்வேயிலும் இப்போது தேர்தல் காலம். அடுத்த மாதத்தில் அங்கு தேர்தல் நடத்த நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் - பின்னணியில் - சமாதான முயற்சியின் முதல் விளைச்சலாக வந்த போர் நிறுத்தம், நீடிக்குமா என்ற பிரதானமான கேள்வி - சந்தேகம் - எழுந்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் ஒப்பமிட்டவர்கள் அரசும் விடுதலைப் புலிகளும்; பிரதான பங்காளிகள் அவர்கள். ஆகையால், உடன்படிக்கையைப் பேணுவதாயின் இரண்டு தரப்பினரிடமும் நல்லெண்ணமும் புரிந்துணர்வும் நட்புறவும் தேவை.

ஆனால், மேற்சொன்ன மூன்றுமே இரண்டு தரப்புகளுக்கிடையில் தேய்ந்து தேய்ந்து போவதையே அவதானிக்க முடிகிறது; அன்றி வளர்வதாக இல்லை. இரண்டு தரப்புகளின் நிலைப்பாடுகளும் அவர்கள் தரப்பில் வெளியிடப்படும் கருத்துக்களும் இறங்குமுகமான வரைவுகளையே காட்டுகின்றன - வெளிக்கொணர்கின்றன .

"வடக்கு - கிழக்கில் இராணுவத்தின் ஆதரவுடன் இயங்கி வரும் ஆயுதக்குழுக்களாலேயே புரிந்துணர்வு ஒப்பந்தம் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. அவற்றின் ஆயுதங்கள் உடனடியாகக் களையப்படவேண்டும் -

"இலங்கை அரசு அதனைச் செய்து, சட்டவிரோத ஆயுதக் குழுக்களை வடக்கு - கிழக்கில் இருந்து வெளியேற்ற வேண்டும். அரசு அப்படிச் செய்யுமானால், அது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இருக்கும்-

"இந்த வகையில் அரசு தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினால், போர் நிறுத்தத்தைத் தொடர்ந்தும் பேணமுடியும். இதன் மூலம் எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையைக் கட்டி எழுப்பமுடியும். நல்லெண்ண சமிக்ஞைகளை அரசே வெளிப்படுத்தவேண்டும்"-

இவ்வாறு தம்மைச் சந்தித்துக் கலந்துரையாடிய நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடர்ஹெல்கிஸன் குழுவினரிடம் தெளிவுபடக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம். கடந்த திங்கட்கிழமை லண்டனில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மறுபக்கத்தில் - அரசுத் தரப்பில் - அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால கூறியிருப்பது, புலிகளின் தரப்பின் நிலைப்பாட்டுக்கு மெத்தவும் எதிர்மாறானதாகவே இருக்கிறது!

புரிந்துணர்வு ஒப்பந்தம் - போர்நிறுத்த ஒப்பந்தம் - கைச்சாத்தான போது கருணா அணி இருக்கவில்லை; இயங்கவில்லை. கருணா குழு விவகாரம் விடுதலைப் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினை -

ஆகையால், கருணா அணியைத் தேடிப் பிடித்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கை எதிலும் அரசு ஈடுபடமாட்டாது - என்று தனபால கருத்துக் கூறியுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

கருணா அணி என்பது, விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்தும் எண்ணத்துடன் அரசு ஆதரவுடன் உருவாக்கப்பட்டது. தனியாள் ஒருவரின் பிறழ்வைப் பயன்படுத்தி உரமும் ஊக்கமும் அளித்து, பின்னாலே - திரைமறைவிலே - நின்று அரச படைகளே அந்த அணியை இயக்குகின்றன என்பது பொதுவான கருத்து.

போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்துபோகக் கூடிய அளவுக்கு குறிப்பாகக் கிழக்கில் கருணா அணி செயற்படுகிறது என்றால் -

அதற்கு அரசின் ஆதரவும் ஆசீர்வாதமும் உண்டு. அந்த அணியை ஆட்டுவிப்பது, பாலூட்டித் தாலாட்டி வளர்த்து வருவது அரச படைகளே என்பது அம்பலமாகிவிட்ட விடயங்கள்.

ஆனால், அரச சமாதானச் செயலகப் பணிப்பாளரோ முழுப் பூசினிக்காயைச் சோற்றில் புதைக்கப்பார்க்கிறார், பாவம்!

அடர்ந்த காடுகளுக்குள் கருணா குழுவைத் தேடிச் செல்லும்போது, அவர்களுக்கு அப்பால் விடுதலைப் புலிகளுடன் மோதவேண்டிய ஆபத்தான நிலை தோன்றலாம். அத்தகைய மோதல் பெரிய அளவிலான மோதலுக்கு வழி வகுத்து, போர்நிறுத்த உடன்பாட்டை முழுதாக முறியடித்து விடலாம் - என்றவாறும் சப்புக் கட்டுகிறார் அவர்.

பட்டி மன்றங்களிலே, தமது தரப்புக் கருத்தைப் பார்வையாளர்கள் நம்பவேண்டும், ஆதரிக்கவேண்டும். என்பதற்காக எதையும் எப்படியும் திரித்துப் பேசும் பேச்சாளர்களையே அவர் நினைவுபடுத்துகிறார்!

போர் நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தம்மால் வெல்லமுடியாமற்போன விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தவேண்டும். அதேவேளை, ஆயுதங்களையும் ஆயுத தளபாடங்களையும் வாங்கிக் குவித்து இராணுவ நிலையில் தாம் மேலோங்க வேண்டும்-

இந்த எண்ணம், ஆவல் படை அதிகாரிகளிடம் மட்டுமன்றி, அரச 'சமாதான' அதிகாரிகளிடமும் ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதையே மேற்கூறிய கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்தச் சூழ்ச்சியை மறைத்து, நல்லவர்களாக நடித்து - விவாதம் செய்து - காலத்தை வாங்கி, இடையில் தம்மை வளர்த்துக்கொள்ளும் அரச தரப்பினரின் உத்தி, போர் நிறுத்தத்தைத் தக்கவைக்க உதவுமா என்பது சந்தேகமே. எதற்கும் காலந்தான் பதில் கூறும்!

# கடலாதிக்கப்பலத்தில் புலிகளுக்கு முதலிடம்

## புலனாய்வுப்பிரிவு தெரிவித்ததாக 'லக்பிம' தகவல்

கொழும்பு,ஓக.11

சர்வதேச ரீதியில் உள்ள தீவிரவாத அமைப்புகளை ஒப்புநோக்கினால் கடலாதிக்கப்பலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே முதலிடத்தில் உள்ளது.

- இவ்வாறு அரச புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளதாக 'லக்பிம' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ள தீவிரவாத அமைப்புகளான பிரிட்டனில் செயற்படும் ஐ.ஆர்.ஏ. மற்றும் பலஸ்தீன விடுதலை அமைப்பு போன்றவை கூட தமது தேவைக்கு வாடகைக் கப்பல்களையே பயன்படுத்தி வருகின்றன.

ஆனால், விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 4 கப்பல்களும் 10 றோலர் படகுகளும் ஏற்கனவே மத்தியதரைக் கடல் மற்றும் தென்கிழக்காசியக் கடல் பிராந்தியங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளன.

சர்வதேச ரீதியில் வர்த்தக சேவையில் ஈடுபடும் கப்பல்கள் பிரிட்டனில் தலைமையகத்தைக் கொண்ட 'வொய்ட்ஸ்' அமைப்பில் பதிவு செய்யப்படவேண்டும். ஆனால், அங்கு பதிவு செய்யப்படாத கப்பல்கள் சிலவற்றையும் விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்றனர் என்று புலனாய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பதிவுசெய்யப்பட்ட புலிகளின் கப்பல்களுக்கு பெயரும், வர்ணமும் அவ்வவ்போது மாற்றப்படுகின்றன என்றும் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச கப்பல் சேவையின் தலைவரான குமாரன் பத்மநாதன் (கே.பி) மற்றும் சர்வதேச ரீதியிலான ஆயுத விநியோகங்களுக்குப் பொறுப்பான லோறன்ஸ் ஆகியோரின் முகாமைத்துவத்தின் கீழ் இச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்தகைய சர்வதேச வர்த்தகங்கள் ஊடாக ஆண்டொன்றில் 80 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுதலைப் புலிகள் அமைபபு பெறுகிறது. இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிறீன் வைத்தியசாலை சி.பி . கட்டடம் புனரமைப்பு

வலி.தெற்கு,ஓக.11

நூறு வருடம் பழமைவாய்ந்த மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையின் சி.பி.கட்டடம் (C.B.Block) பத்து லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவை புதிய கட்டடத்துக்கு மாற்றம் செய்ய ஆஸ்பத்திரி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆஸ்பத்திரியின் வைத்தியப் பணிக்கென இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள வைத்திய கலாநிதி பிறேமன் ஜெயரட்ணத்தின் முயற்சியால் பலரது நிதி உதவியுடன் மேற்படி சி.பி. கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வைத்திய சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் பல வைத்தியர்கள் இங்கு கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். டாக்டர் சி.அருளானந்தம், டாக்டர் அற்புதஜெயம், டாக்டர் திருமதி ஸ்ரீஸ் கந்தராசா,டாக்டர் செல்வி என்.ஆறுமுகம், டாக்டர் எஸ்.பரமநாதன், டாக்டர் கே.சபாரத்தினம் போன்றோர் இவ் வைத்தியசாலையில் கடமையாற்றி வருகின்றனர்.

நவீனமயப்படுத்தப்பட்டுள்ள இந்த வைத்தியசாலையில், நோயாளர் தங்கி சிகிச்சை பெறுவதற்கான கட்டடத் தொகுதி, ஆய்வுகூடவசதி, இரத்தப்பரிசோதனை ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு நோயாளர்களுக்கு வைத்திய வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ஐ-152)

# நலத்திட்டங்களுக்கான நிதியை பயன்படுத்துவதில் முட்டுக்கட்டை

தென்மராட்சி,ஓக.11

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் நலத்திட்டங்களுக்கு என பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியில் பத்து சதவீதத்தையே அதாவது ஐந்துலட்சம் ரூபாவையே நலத்திட்டங்களுக்கு ஒதுக்கமுடியும் என்று பிரதேசஅபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. இதனாலேயே, இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், நலத்திட்டங்களுக்கு ஐந்து லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக ஒதுக்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலதிக நிதியை வேறு துறைசார் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்படியும்-

அது தொடர்பான விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும் - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

(ஓ-202-117)

# தேசிய எழுச்சி நிகழ்வுக்கான ஏற்பாடு குறித்த சந்திப்புகள்

யாழ்ப்பாணம்,ஓக.11

கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வுக்கான முன்னோடி ஏற்பாடுகள் தொடர்பாக சந்திப்புகள் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகின்றன.

சகல அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர்களுக்கான சந்திப்பு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கரைச்சிக் கோட்ட ஆசிரியர்களுக்கான சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்பாட்டு மண்டபத்திலும் -

கண்டாவளைக் கோட்ட ஆசிரியர்களுக்கான சந்திப்பு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தர்மபுரம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.

பளைக்கோட்ட ஆசிரியர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பளை மகா வித்தியாலயத்திலும்-

பூநகரிக் கோட்ட ஆசிரியர்களுக்கான சந்திப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பூநகரி மகா வித்தியாலயத்திலும் நடைபெறும்.(ஓ-301-202)

# வெடிபொருள் அகற்றும் பணியிலுள்ளோர் பொறுப்புடன் செயற்படுவது அவசியம்!

## சாவகச்சேரி நீதிவான் அறிவுறுத்து

தென்மராட்சி,ஓக.11

வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபடுவோரின் பொறுப்பற்ற தன்மையினால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஆகவே, வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபடுவோர் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ.பிரேம் சங்கர்.

நுணாவில் மேற்கில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட காணியைத் துப்புரவு செய்தபோது அங்கு புதைந்திருந்த வெடிபொருள் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

இவரது சடலத்தை சாவகச்சேரி மருத்துவமனையில் நீதிவான் பார்வையிட்டார்.

அப்போது நீதிவான் வெடிபொருள் அகற்றும் பணியில் ஈடுபடுவோரின் பொறுப்பற்ற தன்மையினால் அநியாயமாக உயிரிழப்பு ஏற்படுகிறது என்றும்-

வெடிபொருள்கள் அகற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் குடியிருப்போர் தமது காணிகளில் அவதானமாக கவனித்து பயன்படுத்தினால் உயிரிழப்புகளையும், அங்கஇழப்புகளையும் தடுக்கலாம் என்றும்-

அங்கு தெரிவித்தார். (ஓ-117)

# சுனாமியால் காணாமற்போனோரின் இறப்பு பதிவுசெய்யப்படுகிறது

யாழ்ப்பாணம்,ஓக.11

ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் காணாமற் போனோரின் இறப்பைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்டப் பதிவகம் மேற்கொண்டுள்ளது.

2005ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி விசேட கட்டளைச் சட்டத்தின் கீழ் இப்பதிவுகளை மேற்கொள்ள அரசு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் பதிவாளர் நாயகத்தினால் சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் இறந்த அல்லது காணாமற்போனோரின் நெருங்கிய உறவினர் அல்லது அது தொடர்பாக நன்கு அறிந்த ஒருவர் விண்ணப்பத்தைக் பெற்றுப் பூர்த்தி செய்து கிராம சேவையாளரிடம் வழங்க வேண்டும்.

அவர் அது தொடர்பாகத் தனது அறிக்கையையும் சேர்த்து பிரதேச செயலர் ஊடாக உதவிப் பதிவாளர் நாயகத்துக்கு அனுப்பிவைப்பார்.

இதன் பின் இறப்பைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை உதவிப் பதிவாளர் நாயகம் மேற்கொள்வார்.(8)


## உதயவாக்கு

அகங்காரத்தை விடுத்து மனிதன் தெய்வ நம்பிக்கையுடன் வாழ முற்பட்டால் நல்வாழ்வு இயலும்.

- சாயி பாபா.

## நாளை

ஆடி 27
வெள்ளிக்கிழமை
12.08.2005
திதி: ஸப்தமி
பிற்பகல் 03.48 வரை
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல்: 04.42 வரை
சுந்தரமூர்த்தி சுவாமிகள்
குருபூசை நாள்
சுபநேரம்: 06.04 - 07.34
ராகுகாலம்: 10.34 - 12.04
(யாவும் பழைய நேரப்படி)



உ

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும்

# கலை இலக்கியப் பெருவிழாச் சிறப்புமலர் – 11-08-2005

## கலைகளுக்குப் புத்துயிரூட்டும் கலைவிழா

வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா 2005, சிறக்க எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இவ்வாறான கலை இலக்கிய விழாக்கள் காலத்தின் இன்றியமையாத தேவையாகிவிட்டன. எமது பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கின்ற கலைகளுக்கு புத்துயிர்ப்பூட்டியும் முகிழ்த்துவரும் கலைஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதிலும் இவ்வாறான விழாக்களின் பங்கு முதன்மையானது என்றால் அது மிகையல்ல.

ஒவ்வோர் இனக்குழுமங்களும் தத்தமது கலாசாரக் காட்டிகளினாலேயே அடையாளப்படுத்தப்படுகின்றன. எனவே, தமிழர்களாகிய நாம் மேலைத்தேசத்தவர்களின் நாகரிகத்திற்கு சற்றும் குறைவுபடாத அதனிலும் ஒருபடி மேலான எமது கலாசார விழுமியங்களை வருங்காலச் சந்ததிக்கு உணர்த்துவதற்கு இன்றைய தலைமுறையினரை பயிற்றுவித்து ஊக்கப்படுத்தி நிலை பேறாக்கு வதற்கு இவ்வகை விழாக்கள் எடுப்பது பெரிதும் அவசியமாகின்றது.

இவ்வாறான கலாசார முன்னெடுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் அரச அதிகாரிகள் பாராட்டுக்குரியவர்கள். இதுபோன்று ஒவ்வொரு வருடமும் இவ்வாறான கலை இலக்கியப் பெருவிழாக்கள் நடத்தப்பெற வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் கூறிநிற்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சி.வ.நித்தியானந்தக் குருக்கள்
முருகமூர்த்தி கோயில் சர்வதேச இந்துமத குருபீட அமைப்பாளர், சங்கானை (யாழ்.மாவட்டம்).

## உள்ளம்மகிழும் விழா



வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினர் 2005 ஒகஸ்ட் 11ஆம், 12ஆம் திகதிகளில் நடத்தும் மாபெரும் கலை இலக்கியப் பெருவிழாவிற்கு வாழ்த்துச்செய்தி தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். கலை இலக்கியங்களின் பொக்கிஷமாகத் திகழும் யாழ். மாவட்டத்திலே சங்கானைப் பிரதேச செயலர் பிரிவும் காலத்திற்குக் காலம் கலை வளர்ச்சியின் பொருட்டு பல்வேறு கலைசார் விழாக்களை நடத்தி வருவது யாவரும் அறிந்ததே. கலைகளைக் கண்டு மகிழாத உள்ளங்களே உலகில் இல்லை எனலாம். கலையானது மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்துள்ளது. அந்தளவிற்குச் சிறப்புப்பெறும் கலைகள் உன்னதமாகப் போற்றப்படவேண்டியவை.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிலே வாழ்பவர்களின் உள்ளங்களில் உறைந்து இலைமறைகாயாக இருக்கும் கலை இலக்கியப் புதையலை வெளிக்கொணரும் பொருட்டு பல்வேறுபட்ட கலை, இலக்கியப் போட்டி நிகழ்வுகளை நடத்திப் பரிசில்கள் வழங்குவதும் இப்பிரதேசத்தில் வாழும் கலைத்துறைக்குப் பங்காற்றும் கலைஞர்களைக் கௌரவித்து மகிழ்விப்பதும் சிறப்பிற்குரியதே. காலதேச வர்த்தமானங்களைக் கடந்துநிற்கும் கலைகளைப் பேணும் பொருட்டும் அவற்றை எமது எதிர்காலச் சந்ததியினரிடம் கையளிக்கும் பொருட்டும் கொண்டாடும் இம்மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா சிறப்புற, விழா இனிது நிறைவுற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்
அரச அதிபர், மாவட்டச் செயலர்,
யாழ்.மாவட்டம்

## மண்மணம் கமழட்டும்



வலி.மேற்கு சங்கானைப் பிரதேச கலாசார பேரவை நடத்தும் கலை இலக்கிய விழாவிற்கு வாழ்த்துக்கூறுவதில், அப்பிரதேசத்தில் ஒரு காலகட்டத்தில் பிரதேச செயலராக இருந்தவர் என்ற வகையிலும், ஈழத்து இலக்கிய கர்த்தா என்ற வகையிலும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வலி மேற்குப் பிரதேசம் வரலாற்றுக் காலத்திலிருந்து கலை இலக்கியமுயற்சிகளில் மிகுந்த பங்களிப்பினை ஈழத்துக் கலை இலக்கியத்திற்கு செய்து வந்திருக்கின்றது. நாட்டுக்கூத்துக் கலைஞர்கள், நாதஸ்வர தயாரிப்புக் கலைஞர்கள், புத்திலக்கிய படைப்பாளிகள், மரபுவழி இலக்கிய பண்டிதர்கள், இசைக்கலைஞர்கள் ஆகிய பல்துறை வல்லுநர்களைத் தன்னகத்தேகொண்ட பெருமை வலி.மேற்குப் பிரதேசத்திற்கு உரியது.

புகழ் பூத்த பல பாடசாலைகளும், ஆலயங்களும், தேவாலயங்களும் இப்பிரதேசத்தின் சிறப்பிற்குச் சான்றாகின்றன. வலிகாமம் மேற்குப் பிரதேச மக்கள் பொதுவாகவே கலை இலக்கியத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள் என்பதை நானறிவேன். கடந்த காலத்தில் அவர்கள் நடத்திய கலை இலக்கிய விழாக்கள் இன்றும் பெருமையாக பலரால் நினைவு கூரப்படுகின்றன.

இன்று இந்தக் கலை இலக்கிய விழாவினை முன்னெடுக்கும் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தா மற்றும் பல்தரத்து உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

கலாநிதி க.குணராசா
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
(முன்னாள் வலி.மேற்குப் பிரதேச செயலர்)

## உள்ளம் உவர்க்கும் உன்னத நிகழ்வு



இனம் ஒன்றின் உயிர்ப்புத்தன்மைகளும் உலகில் அதன் முதன்மைக்குமான வெளிப்பாடு. அதன் மொழி, இன, மத, சூழல் சார்ந்த இயல், இசை இயக்க செயற்பாடுகளில் தங்கியுள்ளது. அந்தவகையில் எமது பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின் கலை, இலக்கிய பிரசவங்கள் சங்ககாலச் சாயல்கொண்டு காலத்திற்குக் காலம் ஏற்பட்ட நவீன மாற்றங்களையும் உள்வாங்கி அதன் தனித்தன்மையோடு தரமுடன் மிளிர்கின்றன. முத்தமிழும் அதில் வல்லோர்களும் என நல்லோர்கள் பலர் இப்பிரதேசத்தில் தோன்றி தம் திறமைகளை உலகறிய வைத்துள்ளனர். இத்திறனாளர்களை அவர்கள் கலைத்திறன்களை பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை பாராண்டோரும் பயனாளிகளும் பாராட்டி வளர்க்கத் தவறியதில் பின்னிற்கவில்லை. அத்தகைய மரபில் நின்று இன்னும் இப்பிரதேசத்தில் வாழும் அழகியல் கலைகளை அவற்றை ஆக்கியளிப்போரை அவனி அறிய வைப்பதிலும் அவர்கள் ஆக்கங்களைக் கண்டுகளித்து இலக்கிய கலைஇரசனையை வளர்ப்பதிலும் எமது பிரதேச கலை இலக்கிய அமைப்பு முன்னின்று உழைத்து வருகின்றது. இம்மரபை ஒட்டி இடம்பெறும் இன்றைய நிகழ்வானது உயிர்த்துடிப்புடனும் கலை விற்பன்னர்களின் உண்மைத்திறன்களை வெளிக்காட்டி எம பிரதேச மக்கள் மட்டுமன்றி யாழ்.மாவட்ட மக்கள், கலை ரசிகர்கள் அனைவரும் கண்டும் கேட்டும், உணர்ந்தும், உள்ளம் உவர்க்கின்ற உன்னத சந்தர்ப்பமாக இக்கலைப்பெருவிழா இடம்பெறும் காலங்கள் அமைகின்றன என்பதை நாம் கண்டு தெளியலாம். எனவே, இத்தகைய அரியதொரு நிகழ்விற்கு நம்மை அர்ப்பணித்து அர்த்தமுடன் செயற்பட்டும் சங்கானைக் கலை, இலக்கிய அமைப்பும் அதன் முயற்சிகளும் என்றும் பாராட்டப்பட வேண்டியவை. முழுமனத்துடனும், முழு மூச்சுடனும் இவர்கள் செயற்பாட்டில் சிறப்புறும் இக்கலை விழா முதன்மையான வெற்றிபெற இறையருள்வேண்டி இம்மனதுடன் வாழ்த்திப் பாராட்டுகின்றேன். அதுமட்டுமன்றி, கலா ரசிகர்களாக விளங்கும் எம்பிரதேச மக்கள் வருடந்தோறும் வளமுடன் இடம்பெறும் இக்கலைப் பெரு விழாவிற்கு தமது பூரண ஆதரவை நல்கி அதனைத் திறம்பட செயற்பட உதவுவதையிட்டு அவர்களையும் பாராட்டி நன்றி பகர்கின்றேன். நிறைவான கலைகள் பல வழங்கும் விற்பன்னர்களையும் பாராட்டி வாழ்த்தி மகிழ்வதில் மகிழ்வடைகின்றேன்.

மக்களின் கலைச் சேவையில்
திரு.சி.ஏ.மோகன்றாஸ்
பிரதேச செயலர்/தலைவர், பிரதேச கலை இலக்கிய குழு, பிரதேச செயலகம் சங்கானை

## கலைஞர்களைப் போற்றுவோம்



சங்கானைப் பிரதேச செயலகம் நீண்டகாலமாகக் கலை, பண்பாட்டு விழாவினை நடத்தி வருகின்றது. இவ்விழாக்களூடாக அப்பிரதேசத்துக் கலைகளை வளர்க்கவும் கலைஞர்களுக்கு ஊக்கம் வழங்கவும் அவர்கள் பெருமுயற்சி செய்து வருகின்றனர். தற்போதைய பிரதேச செயலர் திரு.மோகன்றாஸ் கலை பண்பாட்டிலே ஈடுபாடுடையவர். இவருடைய முன்னோர்கள் இப்பிரதேசத்துக்கு ஆற்றிவந்துள்ள தொண்டினை இவர் தொடர்ந்து செய்துவருகின்றார்.

கலை பண்பாடு எம்முடைய இனத்தைப் பிரதிபலித்துக்காட்டுவன. இவற்றினுடைய வளர்ச்சி எம்முடைய இன வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மக்கள் மனமகிழ்வுடன் வாழ்வதற்குக் கலைகள் உதவவல்லன. இக்கலைகளை எமக்கு அளிக்கும் கலைஞர்கள் போற்றப்படவேண்டியவர்கள். பேணப்படவேண்டியவர்கள். இத்தகைய கலை விழாக்கள் இவற்றுக்கு வாய்ப்பளிக்கின்றன.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் சங்கானைப் பிரதேசக் கலைபண்பாட்டு விழா இந்த ஆண்டும் சிறப்புற்று நடைபெற வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
பணிப்பாளர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## கலைக்களம் சிறக்கட்டும்

சங்கானை இலக்கிய அமைப்பினால் இடம்பெறும் வலி.மேற்குப் பிரதேச கலைவிழாவானது அப்பிரதேச கலைஞர்களையும், கலை இரசிகர்களையும் கலந்துறவாடி களம் கண்டு மகிழச் செய்யும் பொற்காலமாகும். மாரிக்காக வான் நோக்கும் மண் போல வலி.மேற்கு பிரதேச கலைக்களம் இப்பெருவிழாவை எதிர்நோக்குவது என்றும் வருடாவருட வழமை. வளமான பல கலை வெளிப்பாடுகள் இயல் இசை நாடக வடிவங்களில் மரவொழுங்கமைந்தும் – நவீன பாணியிலும் மேடையேறி மக்களின் மனமேடைகளை முழுமையாக நிறைத்து அவர்களை மகிழ்விப்பது இப்பெருவிழாவில் எம்பிரதேசமக்களுக்கு கிடைக்கும் பெரும் வாய்ப்பாகும். இலைமறைகாயாக இருக்கும் இளம் கலைஞர்களுக்கு இவ்விழா ஓர் அரங்கேற்றம். தரமான கலைத்திறனாளர்களுக்கு இவ்விழா வித்துவச் சிறப்பின் வெளிப்பாட்டரங்கம். வலி.மேற்குப் பிரதேச மக்களின் கலைவாழ்வின் அழகுக்கோலங்களை இவ்விழா நாடறியவைக்கின்றது. கலைஞர்களின் திறன் வளர்ப்புப் பரப்பாகவும் சுவைஞர்களாம் இரசிகரின் விருந்தூட்டும் களமாகவும் இக்கலைப் பெருவிழா அமைந்து கலைக்கும் கலை இரசிகர்களுக்கும் உயிர்கொடுக்கின்றது. உயர்வான இவ்வைபவம் உத்தமர்கள் பலர் வழங்கும் உன்னத உழைப்பால் மேன்மை உறுவதை உளமார கண்டு மகிழலாம். அவ்வகையில் வலி. மேற்கு பிரதேச கலை இலக்கிய அமைப்பினரும் அதன் தலைவராக விளங்கும் அரும்பணியாளர் திரு.சி.மோகன்ராஸ் அவர்களும் இக்கலைப் பெருவிழா களம்காணுவதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர்கள். தம் அயராத முயற்சியின் உயர்வு மையமாக அவர்கள் ஒழுங்குபடுத்தியுள்ள இப்பெருவிழாவின் வெற்றிக்கும் சிறப்புக்கும் இறையருளை பிரார்த்தித்து வளமை சேர்த்த அனைவரையும் வாழ்த்திச் சிறப்பிப்பதில் உவகை பெறுகிறேன்.

தி. சிவதட்சணாமூர்த்தி.
(உ.பணியாளர்) தே.இ.சே.ம.
-யாழ். மாவட்டம்.

## கலைகளைப் பேணுவோம்



வலி.மேற்கு பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்

ஒவ்வொரு பிரதேசத்தினதும் பண்பாடு, கலாசாரம், கலை இலக்கிய விடயங்களைப் பேணுவதும் பாதுகாப்பதும் இன்று அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எமது மண்ணிலே உருவாகியிருக்கும் யுத்தசூழ்நிலை காரண மாக நாம் பலவற்றை இழந்து விட்டோம்.

ஓர் இனத்தின் அடையாளம் அவர்களின் மொழியிலும், பண்பாட்டிலும் பிரதேசத்திலுமே தங்கியுள்ளது. எனவே, இவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் வளர்க்க வேண்டும். இன்றைய தலைமுறையினருக்கு எமது மொழியின் வளம், பண்பாட்டின் சிறப்பியல்புகள், கலைப்பாரம்பரியங்கள் முதலியவற்றை எடுத்துக்காட்டவேண்டிய அத்தியாவசியத் தேவையுள்ளது.

தமிழ் ஈழத்து வாழ்வும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் பலத்திலேயே தங்கியிருக்கின்றது. எமது மூதாதையர் விட்டுச்சென்ற கலைஇலக்கியச் சொத்துக்கள் பலவற்றை நாம் மறந்தும் இழந்தும் வருகின்றோம். இத்தகைய சூழலிலே ஒவ்வொரு பிரதேசமும் தமது தனித்துவமான பண்பாட்டுச் சூழலையும் கலை இலக்கியச் செல்நெறியையும் பேணிப் பாதுகாத்து வளர்க்க இத்தகைய விழாக்கள் உதவவேண்டும்.

விழாவோடு மட்டும் நின்றுவிடாமல் தொடர்ந்து எமது கலைச்செல்வங்களைப் பேணும் விதத்திலும் இச் செயலகங்கள் இடம் பெறவேண்டும்.

வலி.மேற்கு பிரதேச செயலர் திரு.மோகன்றாஸ் அவர்கள் மிகுந்த கலை ஈடுபாடு உடையவர் என்பதை நான் நன்கு அறிவேன். அவரின் வழிகாட்டலில் இப்பிரதேசத்தின் கலைச்செல்வங்களை மீட்டு எடுத்து காட்சிப்படுத்தவும் ஆவணப்படுத்தவும் இப்பெருவிழா உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

கலாசாரப் பேரவையின் செயற்பாடுகள் செழிப்புடன் சிறக்க என்றும் என் வாழ்த்துக்கள்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
தலைவர், தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்.

## மனதை மகிழ்விக்கும் பண்பாட்டுப் பெருவிழா

கலையும் கல்வியும் தமிழர்களின் இரு கண்கள் ஆகும். நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், பிரதேசத்துக்கு பிரதேசம் வெவ்வேறுபட்ட அவற்றிற்கே தனித்துவமான கலைப் பாரம்பரியங்களை கொண்டிருக்கின்றன. இவ்வகையில் வலி. மேற்குப் பகுதி இப்பிரதேசத்துக்கே தனித்துவமான கூத்து வகைகளில் ஒன்றான வடமோடி கூத்துவகையைச் சிறப்பம்சமாகக் கொண்டிருக்கின்றது. இவற்றுடன் பலதுறை கலைஞர்களும் கலாபூசணம் பெற்ற சிறந்த கலைஞர்களும் ஒருங்கிணைந்த கலாசாரப்பேரவை என்ற அமைப்பு பிரதேச செயலகத்தில் 1994 இல் இருந்து இன்றுவரை கட்டுக்கோப்புடன் சிறப்பாக இயங்கிவருகின்றது. பல இசைவிழாக்களையும் வருடாவருடம் கலைவிழாக்களையும் தொடர்ந்து நடத்தி கலைஞர்களை ஊக்குவித்தும் வெளிப்படுத்தியும் வருகின்றது. காலத்திற்குக் காலம் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயற்படுத்தி வருகின்ற பேரவை 2002 ஆம் ஆண்டில் இருந்து கலைஞர்களைக் கௌரவித்து பட்டம் வழங்கி வருகின்றது.

இவ்வகையில் இம்முறையும் பிரதேச செயலரும் கலாசார பேரவைத் தலைவருமாகிய திரு.C.A.மோகன்றாஸ் அவர்களின் தலைமைத்துவத்திலும் வழிகாட்டலிலும் புதிய திட்டங்களை உள்ளடக்கியதாக இன்றைய விழா பெருவிழாக் காணுகின்றது. கவிதை, கட்டுரை, நாட்டார்பாடல் போன்ற இலக்கியப்போட்டிகளுடன் கர்நாடக இசை, வயலின், மிருதங்கம், வீணை, நடனம் போன்ற கலைப் போட்டிகளும் நடைபெற்று பரிசில், சான்றிதழ்கள் வழங்குவதுடன் முதலிடம்பெற்றவர்கள் விழாவில் அரங்கேற்றப்படுவது சிறப்பான அம்சமாகும்.

பண்பாட்டுப் பேரணியும் இவ்விழாவின் சிறப்பம்சமாகத் திகழ்கின்றது.

வலி.மேற்கு இன்று காண இருக்கும் பெருவிழா கலைஞர்களினதும் இப்பிரதேச மக்களினதும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினதும் ஒற்றுமையினதும் அர்ப்பணிப்பினதும் சிகரமாக விளங்குவதை காணமுடிகிறது. இவ்வாறான விழாக்கள் மக்களை மகிழ்விப்பதோடு, பண்பாட்டை மீளக்கட்டியெழுப்ப வழிவகை செய்கின்றன மக்கள் வளம்பெற கலைகள் இலக்கியங்கள் நிலைத்துநிற்க வேண்டும் எனக்கூறி இறை ஆசியுடன் வாழ்த்துகின்றேன்.

ரஜனி கந்தசாமி
கலாசார உத்தியோகத்தர் (வலி.மேற்கு).

## பயன்மிக்க முயற்சி

கலை இலக்கியப் பெருவிழாவை வலி.மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவை நடத்துவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். உண்மையிலே எமது தமிழ் கலை இலக்கியத்தை வளர்ப்பதற்கும், அதைப் பேணிப் பாதுகாப்பதற்குமாக இவ்விழா நடத்தப்படுகிறது என்பதையிட்டு சந்தோசமடைகின்றோம். இக்கலை இலக்கியவிழா ஒருவரைப் பூரணமாக்குவதற்கும், அவனுடைய திறமைகளை வளர்ப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுக்கிறது. எமது கலை, கலாசாரம் ஒரு தனித்துவமானதும், மிகவும் புனிதமானதுமாகும். இதைப் பேணிப்பாதுகாப்பதும், அழியவிடாமல் வளர்ப்பதும் எம் ஒவ்வொருவருடைய கடமையாகும். இப்பெரும் பணியை வலி. மேற்குப் பிரதேசச் செயலகத்தின் கலாசாரப் பேரவை செய்து வருகிறது என்பது இவ்விழாவிலிருந்து தெளிவாகின்றது. இப்பெரும் முயற்சியை இறைவன் உண்மையாகவே நிறைவாக ஆசீர்வதிப்பாராக. மனிதன் கலை இலக்கியங்களினூடாகவும் இறைவனை மகிமைப்படுத்துகின்றான்.

இவ்விழாவை முன்னிட்டுப் பல போட்டிகள், நிகழ்வுகள் இடம்பெற்றன. இவை அனைத்தும் இவ்விழாவை மேலும் சிறப்பிக்கின்றது. இப்படியான முயற்சி ஒவ்வொரு பகுதியிலும் முன்னெடுக்கப்படவேண்டும். அண்மைக்காலத்தில் கலாசாரச் சீரழிவு இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இதன் முக்கியகாரணிகளாக, போதைவஸ்து, மதுபானம், சினிமாப்படங்கள், பாலியல் சம்பந்தமான திரைப்படங்கள், நீலப்படங்கள் இருக்கின்றன. இவற்றை முற்றாக அழிக்கவேண்டியது மிகவும் அவசரமானதும், முக்கியமானதும் இவற்றைப்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பும், எமக்குண்டு, ஒவ்வொரு நலன்விரும்பிக்குமுண்டு என்பதை உணரவேண்டும்.

இவ்விழா சிறப்பாகவும், பயனுள்ள விதமாகவும் இடம்பெற இறைவன் ஆசீர்வதிப்பாராக.

இறைமகன் கிறிஸ்து இயேசு உங்களை ஆசிர்வதிப்பாராக.

அருட்தந்தை ஆ. யூட் நிக்சன்
பங்குத்தந்தை, புனித கதிரை மாதா ஆலயம்,
சில்லாலை.

## மகத்தான பணி சிறக்கட்டும்



மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தவையாக விளங்குவன அவர்களது கலைகள் ஆகும்.

ஓர் இனத்தின் பண்பாடு பாரம்பரியங்களைப் பறைசாற்று வதில் அவர்கள் சார் கலைகள் என்றைக்கும் பின்னின்றதில்லை. இன்றுகூடக் கலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணிக்கின்றவர்கள் இருக்கின்றனர் என்பதை நாம் எண்ணிப் பெருமைப்படவேண்டும். இன்று இக்கலைகளைப் பெறுவதற்காகப் பின்பற்றுவதை மாபெரும் உந்துசக்தியாக கலை இலக்கியப் பெருவிழாக்காணும் வலி. மேற்கு கலாசாரப் பேரவையினரின் செயற்பாடுகளை நன்கு அறிந்தவன் என்றவகையில், இவ்விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வலி.மேற்குப் பிரதேச செயலகம் பல கலைஞர்களையும் பண்டிதர்களையும் புலவர்களையும் வரகவிகளையும் உருவாக்கிய உருவாக்கிவரும் பிரதேசம் என்றால் அது மிகையாகாது. பிரதேச செயலகம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளுடன் மட்டும் நின்றுவிடாது அப்பிரதேசத்திற்குரிய பண்பாடு, கலை கலாசாரங் களையும் வாழ்விப்பதில் பங்காற்றவேண்டும். இதற்கு வலி.மேற்கு பிரதேச செயலகத்தை எந்தவகையிலும், குறைத்து மதிப்பிட முடியாத அளவிற்கு கலைத்துறை அளப்பரிய சேவை களை வழங்கிவருவதை நான் வரவேற்கின்றேன். உள்ளூர் கலைஞர்களை கௌரவித்தல் இளம் கலைஞர்களை ஊக்குவித்தல் பண்பாட்டு அடையாளங்களை நிலைபெறச்செய்தல், இலை மறைகாயாக உள்ள கலைஞர்களது அம்சங்களை வெளிக்கொணர்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக மேன்மேலும் தம் பிரதேசத்தைக் கலைத்துறையில் வளம்பெறச் செய்வது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

வலி.மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் தலைவரும், பிரதேச செயலருமாகிய திரு.C.A.மோகன்றாஸ் தலைமையில் செயலக உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து 11ஆம், 12 ஆம் திகதிகளில் மாபெரும் கலை இலக்கியப் பெருவிழா காண்கின்றனர். கலையை வாழ்விக்கும் நோக்கோடு கலைத்துறைக்குப் பங்காற்றும் இவர்களின் மகத்தான பணியை வாழ்த்தி விழாச் சிறப்புற நிறைவுபெற இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.செ.பத்மநாதன்
திட்டப்பணிப்பாளர் (உலக வங்கி வீடமைப்புத்திட்டம்), முன்னாள் அரச அதிபர்

## விழுமியங்களைப் பாதுகாப்போம்



வலி.மேற்கு கலாசாரப்பேரவையால் 2005 ஆம் ஆண்டுக்கான கலை இலக்கியப் பெருவிழா நடத்தப்படுவதையிட்டும் மலர் வெளியிடப்படுவதையிட்டும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது மாவட்டத்தில் கலாசார விழுமியங்கள் பேணப்படுவதும் கலைஞர்கள் ஊக்குவிக்கப்படுவதும் அவசியமானது. கலைஞர்களுடைய தேவைகள் பல கவனிக்கப்படவேண்டியனவாக உள்ளன. இக்கலைஞர்களுக்கான ஆதரவையும் ஊக்குவிப்பையும் சமூகமும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் ஆர்வலர்களும் வழங்குவதில் முக்கியபங்கினை ஏற்கவேண்டும். அவ்வகையில் வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையால் ஆண்டுதோறும் கலை இலக்கியப் பெருவிழா போன்ற நிகழ்வுகள் நடத்தப்படுவதும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதும் அவர்களது பெருமைகளை பலரும் அறியச் செய்வதும் இளம் சந்ததியினரையும் இணைத்துக்கொள்வதும் அத்துடன் எழுத்துருவிலான ஆக்கங்களை சமூகத்திற்குக் கிடைக்கச் செய்வதும் வரவேற்கப்படவேண்டியவையாகும். இப்பேரவையின் மலர்வெளியீடு நல்லதொரு முயற்சியாகும். இம்முயற்சிக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வலிகாமம்மேற்கு கலாசார பேரவையின் கலைப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆ.சிவசுவாமி
மேலதிக அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

மலர் வடிவமைப்பு:
வி.ரி.கதிர்காமநாதன்
கிராம அலுவலர்

# உடல்வலுவுள்ள இளம் பரம்பரையை உருவாக்கும் பணியில் பயிற்சிநிலையம்




இன்றைய கால இளம் தலைமுறையினரிடையே ஒழுக்கமின்மை, கட்டுப்பாடின்மை, பயமின்மை, அடாவடித்தனம் போன்ற குணவியல்புகள் உருவாகிப் பல சமூகச் சீரழிவுகளையும் குற்றச் செயல்களையும் ஏற்படுத்தி வருகின்றன. இத்தன்மைகளை மாற்றியமைத்து ஆரோக்கியமான உடல்வலுக்கொண்ட கட்டுப்பாடான ஒழுக்கமுள்ள இளம் சமுதாயம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.



என்ற நல்ல நோக்கத்துடன் ஸ்ரீராம் உடல் வலுவூட்டல் பயிற்சிநிலையம் இணுவில், சுன்னாகம் - கந்தரோடை வீதி ஆகிய இடங்களில் பயிற்சிமையங்களை அமைத்துப் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் இராஜேந்திரம் அருள் தீபனுடன் தொடர்புகொண்டு கதைத்த போது அவர் வழங்கிய தகவல்களை இங்கே தருகிறோம்.

✱ ***கேள்வி:*** வலுவூட்டல் பயிற்சிநிலையத்தை ஆரம்பித்ததன் நோக்கம் என்ன? வழங்கப்படும் பயிற்சியினால் பெறப்படும் நன்மைகள் எவை? பயிற்சி நடைமுறைகள் எவை? என்பவற்றை விளக்குவீர்களா?

• ***பதில்:*** தமிழர் தாயகத்திலே உடல்வலுவுள்ள - கட்டுக்கோப்பான - ஒழுக்கம் மிக்க சிறந்ததொரு இளம் பரம்பரையினரை உருவாக்க வேண்டும் என்பதே எமது முதல் நோக்கம்.

எமது பயிற்சிநிலையத்தில் இளைஞர் முதல் முதியோர் வரையான சகல தரப்பினருக்கும் ஒவ்வொருவருடைய உடல் நிலைகளுக்கும் ஏற்றவகையில் பல பயிற்சிகளை வழங்குகிறோம். உடல்பருத்தவர்கள், தொந்தி பருத்தவர்கள் போன்றோர் எம்மிடம் பயிற்சிகளைப் பெற்று ஒரு சில மாதங்களில் சீரான உடல் நிலையைப் பெற்று அழகாகவும் வலுவாகவும் தோற்றம்பெறுகின்றனர். ஆறு மாதம் தொடக்கம் ஒரு வருடகாலம் வரையில் ஒழுங்காகப் பயிற்சி பெறுபவர்களது சதைகள், தொந்திகள் வற்றி அழகான தோற்றத்தைப் பெற முடியும். உடற்பயிற்சியை முறையாக மேற்கொள்வதன் மூலம் கொலஸ்ரோல், நீரிழிவு, இரத்த அழுத்தம், முட்டு போன்ற பல நோய்களிலிருந்து விடுபடலாம். இப்பயிற்சிகளைப் பெறுபவர்களுக்கு ஆஸ்பத்திரியை நாடவேண்டிய நிலை ஏற்படாது.

250 பேர்வரை எமது நிலையம் ஊடாகப் பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். புகைபிடித்தல், மது அருந்தல் என்பவற்றை முற்றாகக் கைவிடவேண்டும் என பயிற்சிகளின் போது வலியுறுத்துகின்றோம்; ஆலோசனைகளையும் வழங்குகின்றோம். ஒருவர் ஒரு நாளுக்கு ஒன்றரை மணிநேரப் பயிற்சி பெற்றால் போதுமானது.

✱ ***கேள்வி:*** பயிற்சிமையங்களை எங்கெல்லாம் நடத்திவருகிறீர்கள்?

• ***பதில்:*** இணுவில் - மானிப்பாய் வீதியில் நாம் முதல் பயிற்சி மையத்தை அமைத்த போது சொற்பமானவர்களே பயிற்சிக்காக இணைந்துகொண்டனர். பயிற்சியின் மகத்துவம் தெரியவர ஏராளமானவர்கள் வரத் தொடங்கினர். இதனால், சுன்னாகம் - கந்தரோடை வீதியில் மற்றுமொரு நிலையத்தை நிறுவியுள்ளோம். எம்மிடம் சரியான முறைப்படி பயிற்சிபெற்றவர்கள் சிலர் வேறு சில இடங்களில் பயிற்சியளித்து வருவதால், பயிற்சி வெற்றியளித்துள்ளது.

✱ ***கேள்வி:*** நீங்கள் யாரிடம், எவ்வாறு இப்பயிற்சிகளைக் கற்றுக்கொண்டீர்கள்?

• ***பதில்:*** இளைஞரான நான் உடலுறுதியோடு வாழவேண்டும் என விரும்பி விடுதலைப் புலிகள் அளித்த பயிற்சியில் சேர்ந்து கொண்டேன். யோகரட்ணம் மாஸ்ரரிடம் முதலில் கராத்தே பயிற்சியைக் கற்றேன். பின்னர் உடல்வலுவூட்டல் பயிற்சிகளைக் காந்தன் மாஸ்ரரிடம் பெற்றேன். கராத்தே யைவிட உடல்வலுவூட்டல் பயிற்சியால்தான் இளைஞர் கள் பல நன்மைகளைப் பெறலாம் எனக் கருதி எனது நண்பர்கள் சிலருடன் இணைந்து ஸ்ரீராம் உடல்வலுவூட்டல் பயிற்சிக் கழகம் ஒன்றை ஆரம்பித்தேன். கடந்த ஏழு வருடங்களாகப் பயிற்சி நிலையம் இயங்கிவருகிறது.



நான் பயிற்சிபெற்று, பயிற்சிகளை வழங்கிய காலம் ஒரு போர்க்காலம். பயிற்சியின் பின் களைத்துக்காணப்பட்டால் அல்லது பயிற்சியினால் நல்ல தேகக்கட்டைப் பெற்றிருந்தால் அவசரகாலச் சட்டத்தின்கீழ் அவர்களைப் 'புலி' என முத்திரைகுத்தி கைதுசெய்யக்கூடிய காலம் அது. இதனால் விலாசமான முறையில் பயிற்சிகளை வழங்காமல் நன்கு தெரிந்த நண்பர்களுக்கு மட்டுமே பயிற்சிகளை வழங்கினேன்.

✱ ***கேள்வி:*** இதுபோன்ற உடல்வலுவூட்டல் பயிற்சி நிலையங்கள் வேறும் உண்டா?

• ***பதில்:*** அனலைதீவில் ...ன்னிப் பிராந்தியத்தில் 'சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம்' ஒன்று செயற்படுவதாகவும் அது தமிழீழத் தேசிய வலுவூட்டல் பயிற்சி நிலையமாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

✱ ***கேள்வி:*** உடல் வலுவூட்டல் பயிற்சி பெறுபவர்களுக்கு குழந்தை பெறும் பாக்கியம் இல்லாது போய்விடுவதாகக் கூறப்படுகின்றதே. உண்மைதானா?

• ***பதில்:*** அப்படி எதுவும் இல்லை. அது ஒரு மூடநம்பிக்கை தொடர்ச்சியாக ஐந்து வருடம் பயிற்சிபெற்று திடகாத்திரமான உடற்கட்டை பெற்றுக்கொண்டவர்கள் பலர் திருமணவாழ்வில் இணைந்து குழந்தைகளைப் பெற்று இன்னும் தொடர்ந்து உடற்பயிற்சியில் ஈடுபடுபவர் பலரை என்னால் உதாரணம் காட்டமுடியும்.

✱ ***கேள்வி:*** பயிற்சி இயந்திரங்களுக்கான முதலீடுகளை எப்படிப் பெறுகிறீர்கள்? யாரெல்லாம் ஆதரவு தருகிறார்கள்?

• ***பதில்:*** பல நிறுவனங்களின் ஆதரவு எமக்கு உண்டு. விளையாட்டுக் கழகங்கள் பல பூரண ஒத்துழைப்புத் தருகின்றன. யாழ்ப்பாணத்தில் ஒருமுறை அங்கீகரிக்கப்பட்ட போட்டியொன்று நடைபெற்றபோது எமது

**வி.பி. சர்மா**

அங்கத்தவர் முதல் இரு இடங்களைப் பெற்றனர். அவர்கள் இருவரும் பல்கலைக் கழக மாணவர்கள். தினமும் காலை நான்கு மணிமுதல் இரவு ஒன்பது மணிவரை பயிற்சிகள் நடைபெறும். சனி, ஞாயிறு தினங்களில் அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக் கழக மாணர்கள் அதிக அளவில் கலந்துகொள்கின்றனர். மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பயிற்சி சாதனங்களை எமது சொந்தச் செலவிலேயே வாங்கியுள்ளோம். இச் செலவுகளுக்காக பயிற்சியாளர்களிடம் ஒரு சிறிய தொகை பெறப்பட்டாலும் ஏராளமான வறியவர்களுக்கு இலவசமாகவே பயற்சியளிக்கின்றோம். பயிற்சியினால் பலன்பெறும் பல இளைஞர்களைப் பார்த்து பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளும் தீயவழியில் சென்றுவிடாதிருக்க எமது நிலையத்தில் பயிற்சிக்காகக் கொண்டுவந்து சேர்க்கின்றனர்.

✱ ***கேள்வி:*** உங்கள் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கூறுவீர்களா?

• ***பதில்:*** நவீன மயப்படுத்தப்பட்ட இயந்திரசாதன உதவிகொண்டு இலகுவான பயிற்சிகளைத் தற்போது வழங்கிவருகிறோம். யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் குளிரூட்டப்பட்ட காட்சியறையில் பயிற்சிகள் வழங்கும் செயற்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

அதற்கான இயந்திரசாதனங்கள், தொழில்நுட்பங்களை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள முயற்சிசெய்துவருகின்றோம்.

எமது நிலையத்தில் பயிற்சிபெற ஏராளமான பெண்கள் ஆர்வத்துடன் வருகின்றனர். அவர்களுக்குப் பிரத்தியேகமாகவே பயிற்சிகள் வழங்கவேண்டும். விரைவில் பெண்களுக்கான பயிற்சிமையங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளோம். எந்த வகையிலும் எமது மண்ணில் சீரான ஒழுக்கநெறி கொண்ட உறுதியான உடல் வலுக்கொண்ட ஒரு பரம்பரையை உருவாக்குவதே எமது நோக்கமாகும். ✱



ஹற்றன் நஷனல் வங்கியின் நெல்லியடிக் கிளையில் நடந்த 'பத்தும் விமன' சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு குளிர்சாதனப் பெட்டியை பரிசாக வங்கி முகாமையாளர் என்.கே.சபேசன் வழங்குகிறார். அருகில் உதவி முகாமையாளர்,நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் காணப்படுகின்றனர்.(படம்:- கரவெட்டிச் செய்தியாளர்)

# இளஞ்சாதனையாளர் ஐவர் யாழ். மாவட்டத்தில் தெரிவு

யாழ்ப்பாணம்,ஓக.11

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் மக்கள் வங்கி அகில இலங்கை ரீதியில் சிசு உதான இளஞ்சாதனையாளர் போட்டி ஒன்றை நடத்தியது.

கடந்த ஆண்டு முதன்முறையாக அறிமுகஞ்செய்த இப்போட்டியில் சாதனையாளர்களாக யாழ்.மாவட்டத்திலிருந்து 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

க.தர்சனன் (யாழ். இந்துக் கல்லூரி), ஜெ.நியூமன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), ச.சுகன்ஜா சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி), வி.ஜீவிகா (யூனியன் கல்லூரி), கு.குருபரன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகிய 5 மாணவர்களுமே இளஞ்சாதனையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



சாதனையாளர் கௌரவிக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.

மாணவர்களிடையே புத்தகக் கல்வி தவிர்ந்த ஏனைய துறைகளில் அவர்களுக்கு உள்ள ஆற்றல்களை வளர்க்கும் நோக்கில் - ஏனைய துறைகளில் அவர்கள் பெற்றுள்ள தேர்ச்சி அடைவிலேயே இச்சாதனையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



சாதனையாளர்களில் நால்வர்

இச் சாதனையாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு அண்மையில் மக்கள் வங்கியின் யாழ்.பிரதேச தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நால்வர் மட்டும் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவ பீடத் தலைவர் க.தேவராசா, இந்துக் கல்லூரி அதிபர் க.ஸ்ரீகுமாரன், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.குமாரவடிவேல், யூனியன் கல்லூரி அதிபர் க.புண்ணியசீலன், மக்கள் வங்கி வட வலய உதவிப் பொது முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர், பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவபீடத் தலைவர் ம.நடராஜசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். (3-202-203)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் வைத்திலிங்கம்



மாதகலைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் வைத்திலிங்கம் அவர்கள் 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் அழகம்மா, இராசேஸ்வரி, தவராசா (கனடா), கமலேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் அமரர் கந்தசாமி (உரிமையாளர் - கண்ணன் ஸ்ரோர்ஸ்) மற்றும் கணபதிப்பிள்ளை, சற்குணலீலா (கனடா), அமரர் கந்தசாமி, செல்வராசா (வவா கடை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'முருகவாசா'*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-44485)(15-34-42)

## மரணக்கொடுப்பனவு சேமிப்புப் புத்தகங்கள்

வலிகாமம் வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் மரண நன்கொடை சகாய நிதியில் சேர்ந்துள்ள அங்கத்தவர்களுக்குரிய மரணக் கொடுப்பனவு சேமிப்புப் புத்தகங்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படவுள்ளன. மல்லாகம் மகா வித்தியாலயத்தில் மேற்படி சங்கக் கூட்டம் க.நடராஜா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் சேமிப்புப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. மரண நன்கொடையில் பங்குகொண்ட சகல அங்கத்தவர்களும் அன்று காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்துக்கு வருகை தந்து தமது சேமிப்புப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கா.சரவணமுத்து தெரிவித்தார். (3-152)





இதோ...
வெளிவந்துவிட்டது ஆகஸ்ட் மாத
பூங்கனி
சிறுவர் மாத இதழ்
சிறுவர்கள் விரும்பி வாசிக்கும்
சகல அம்சங்களையும் தாங்கி
புதிய பரிமாணத்துடன் வெளிவந்திருக்கிறது
நாடு முழுவதுமுள்ள
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கிறது.
(38509)
"வாசிப்பு ஒன்றே பூரணமான எதிர்காலத்தை உருவாக்கும்"



S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே
கேட்டு வாங்குங்கள்




Rediffusion DYR 497/11/04

எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை
நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-lon
என்றும் முன்னணியில்

S-lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுருக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741


## வலி.மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும்

## கலை இலக்கியப் பெருவிழா - 2005

**இடம்:** கலாசார மண்டப திறந்த வெளியரங்கு, சங்கானை
**காலம்:** ஓகஸ்ட் 11ஆம் 12ஆம் திகதிகள்
12.08.2005 வெள்ளிக்கிழமை

*காலை நிகழ்வு*

நேரம்: மு.ப. (10.00 - 12.00)
இடம்: கலாசார மண்டபம்

*'வழக்காடுமன்றம்'*

மாலை நிகழ்வு நேரம் பி.ப.2.30 மணி

அமரர் க.ட.சந்திரராஜா அரங்கு

**தலைமை:** திரு.சி.ஏ.மோகன்றாஸ்
பிரதேச செயலர், தலைவர், கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், வலி.மேற்கு.

**முதன்மை விருந்தினர்:**
உயர்திரு.கே.கணேஷ்
யாழ். மாவட்டச் செயலாளர்,
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்

**சிறப்பு விருந்தினர்கள்:**
திரு.ஆ.சிவசுவாமி
மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
கவிஞர் புதுவை இரத்தினதுரை
விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர்

**கௌரவ விருந்தினர்கள்:**
திரு.S. அச்சுதம்பிள்ளை
முகாமையாளர், மக்கள்வங்கி,சங்கானை
திரு.நா.சண்முகசுந்தரம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
வலிகாமம் மேற்கு
திரு.அ.அன்பு
தமிழீழ விடுதலைப் புலிகள்
அரசியல்துறைப் பொறுப்பாளர் வலிகாமம்
திரு.கே.தர்மராஜா
ஓய்வுபெற்ற
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்
திரு.தி.சிவதட்சணாமூர்த்தி
உதவிப்பணிப்பாளர் தேசிய இளைஞர் மன்றம்

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- அகவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து:- சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தி. மாணவிகள்
- மங்கள இசை :- நாதஸ்வர இளவரசர் இ.சிவகுமார் குழுவினர்
- வரவேற்பு நடனம்: வட்டு. மத்திய கல்லூரி மாணவிகள்
- வரவேற்புரை: திருமதி பா.தேவந்தினி உதவிப் பிரதேச செயலர், சங்கானை
- ஆசியுரை: அருட்திரு.யூட் நிக்சன் அடிகளார் பங்குத்தந்தை சில்லாலை, சங்கானை
  சிவஸ்ரீ சபா வாசுதேவக்குருக்கள் சிவன் தேவஸ்தானம் சித்தன்கேணி
- தலைமையுரை:
- உழவர் நடனம்: வட்டு. மத்திய கல்லூரி மாணவர்கள்
- போட்டியில் 1ஆம் பரிசு பெற்றவர்களின் கலைநிகழ்ச்சி
- வாழ்த்துரை: பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
  யாழ்.பல்கலைக்கழக, ஊடக வளங்கள் பயிற்சி நிலைய இணைப்பாளர்
- கலைஞர் கௌரவிப்பு:
  தொகுத்து வழங்குபவர்
  கலாசார உத்தியோகத்தர், திரு.தி.உதயசூரியன் (பொருளாளர் கலாசாரப் பேரவை)
- பரிசில் வழங்கல்:
- பரதம்: சுமங்கலை குலசேகரம், சௌமியா சச்சிதானந்தன். நட்டுவாங்கம்: திருமதி கே.சிவதாஸ்
- சிறப்புவிருந்தினர்கள் உரை:
- நாட்டியாஞ்சலி: திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன் பொன்னாலை சந்திர பரத கலாலயம்
- முதன்மை விருந்தினர் உரை:
- கெஞ்சிற் கச்சேரி: வே.இரத்தினம் குழுவினர், பொன்னாலை
- பக்தி நடனம், எழுச்சி நடனம்: K.S. பாஸ்கரன் குழுவினர் பருத்தித்துறை
- இசைஅரங்கு
  கலாபூஷணம்
  க.கணபதிப்பிள்ளை, பொன்னாலை
- நாட்டிய நாடகம்:
  கலைமாணி பிறேமலோஜி சுதேஷ்குமார்
  *'விடியலை நோக்கி'* குழுவினர் சாயி நுண்கலை மன்றம்.
- இசை நாடகம்: அரியாலையூர் நடிக கலாமணி வி.செல்வம் குழுவினர்

**'சத்தியவான் சாவித்திரி'**

- நன்றியுரை: திரு.ஆ.சபாநாதன்
  நிர்வாக கிராம உத்தியோகத்தர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கலாசாரப் பேரவை,*
*பிரதேச செயலகம்,*
*சங்கானை.*


*மேற்படி விழா சிறப்புற வாழ்த்துவதுடன் ஏற்பாடு செய்த பிரதேச செயலரையும் கலாசாரப் பேரவையினரையும் பாராட்டுகின்றோம்.*

**வேணி களஞ்சியம்**
**வேணி ரான்ஸ்போட்சேவிஸ்**
165, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
021 222 2661
222 2046

(38681)(49-15-45)

# போருக்குத் தயாராகின்றது இராணுவம்! முறியடித்து வெல்லப் புலிகளும் தயார்!!

## ஒன்றிணையுமாறு தமிழருக்கு தளபதி அமிர்தாப் அறைகூவல்!

பரந்தன்,ஓக.11



**ஆயுத தளபாடங்களை பெருமளவில் வாங்கிக் குவித்து மீண்டும் ஒரு போரைத் தொடங்குவதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் தயாராகி வருகின்றது. அதனை எதிர்கொண்டு முறியடித்து வெற்றி கொள்வதற்கு விடுதலைப் புலிகளும் தயாராகவே இருக்கின்றனர்.**

**இந்த நேரத்தில் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து- திடசங்கற்பத்துடன்- போருக்கு முகங்கொடுக்கவேண்டும்.**

**இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப்.**

புலிகளின் குரல் வானொலியின் பதினைந்தாவது முத்தமிழ் கலையரங்கம் நிகழ்வு கடந்த வாரம் விசுவமடு மைதானத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தளபதி அமிர்தாப் மேலும் கூறியதாவது:-

நாம் ஒரு வெற்றிச் செய்தியோடு உங்களைச் சந்திக்க விரும்புகின்றோம். ஆனால், வெற்றிச் செய்திக்கு முன்னால் சில விடயங்களை சொல்லவேண்டிய தேவை இருக்கின்றது.

தமிழீழப் போராட்ட வரலாற்றில் கடந்த மூன்று வருடங்களாக ஒரு தற்காலிக அமைதிச் சூழல் நிலவிக்கொண்டிருக்கின்றது

இந்த சமாதானச் சூழல் என்பதற்கு அப்பால் கடந்த சில வாரங்களுக்கு முன் கொழும்பில் சந்திரிகா அவர்கள் ஓர் உயர் மட்ட மாநாடொன்றை நடத்தி இருந்தார். அந்த மாநாட்டில் முப்படைத் தளபதிகளையும் அழைத்து சில முக்கியமான விடயங்களை கலந்துரையாடியிருந்தார்.

இராணுவத்திற்குள் ஏற்பட்டிருக்கின்ற குழப்பங்களைச் சரிசெய்துகொண்டு உடனடியாகவே இராணுவத்தினருக்குத் தேவையான ஆயுதங்கள், இராணுவ தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான சில பரிந்துரைகளை அக்கலந்துரையாடலில் ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

இதுவரை காலமும் இல்லாதவகையில் சிறிலங்கா இராணுவத்தின் தரைப் படைக்கு 6 ஆயிரத்து 400 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் விமானப்படைக்கு 4 ஆயிரத்து 600 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் கடற்படைக்கு ஆயிரத்து 500 கோடி ரூபா பொறுமதியான ஆயுதங்களையும் காவல்துறைக்கு 50 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் உடனடியாகக் கொள்வனவு செய்யும்படி பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பக்கம் சமாதானச் சூழல், மறுபக்கம் ஆயுதக் கொள்வனவு.

யாழ்ப்பாண முனையில் நாகர்கோயில் தொடக்கம் கிளாலிக்கரை வரைக்கும் இராணுவம் தங்களுடைய காவல் அரண்களை மிக நவீனமான முறையில் பலப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இரவு பகலாக பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இதன் நோக்கம் என்ன? இந்தப் பாதுகாப்பான எல்லையில் எமது போராளிகளும் இரவு பகலாக தரித்து நிற்கின்றார்கள். எமது தமிழீழ பிரதேசங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

சண்டைக் காலத்தில் - மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சிறிலங்காவின் படைகளுக்கு எதிராக மழை, இடிமின்னல்களையும் பொருட்படுத்தாமல் சண்டைகளைச் செய்தோம்.

ஆனால், இன்றைய அமைதிச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு சிறிலங்கா அரசாங்கம் ஆயுதக்குழுக்களைக் கொண்டு தமிழர் பகுதிகளில் ஊடுருவி தாக்குதலைத் தொடுத்து விடுதலைப் புலிகள் மீது ஒரு நிழல் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது.

எனவே, இன்றைய சூழலை மாற்றி அமைக்க வேண்டும். உலகம் ஒன்றை விரும்புகின்றது. சிறிலங்கா அரசாங்கம் ஒன்றை விரும்புகின்றது. தமிழ் பேசும் மக்களும் நாங்களும் சேர்ந்து ஒன்றை விரும்புகின்றோம். நாங்கள் விரும்புவதை அடைவதற்காக நாங்கள் உழைத்துக்கொண்டிருக்கின்றோம்.

சிறிலங்கா அரசாங்கம் தான் விரும்புவதை அடைவதற்காக தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றது. தமிழீழத்தையும் சிறிலங்காவையும் வைத்துக்கொண்டு உலகம் இதன்மூலம் தான் ஒன்றை அடைவதற்காக நகர்ந்து கொண்டிருக்கின்றது. வெளிநாடுகளான அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள் இதில் அக்கறை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம்.

உலகத்திலே முதலாவது வல்லரசென்று சொல்லப்படுகின்ற அமெரிக்கா இன்றைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்திருக்கின்றது. பயங்கரவாதப் பட்டியலில் எமது பெயரையும் சேர்த்துள்ளது.

இப்படியான சூழ்நிலையில் அமெரிக்கா சொல்வதை செய்கின்ற நோர்வேயால் இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு எப்படித் தீர்வு ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பதை நாங்கள் ஆழமாக பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது.

நாங்கள் இந்த மூன்று ஆண்டுகாலத்தில் பல பேராளிகளை இழந்திருக்கின்றோம்.

சிறிலங்கா இராணுவத்தை 2001 ஆம் ஆண்டு தீச்சுவாலை நடவடிக்கையில் முறியடித்து விரட்டி அடித்த இடத்தில் தற்போது நாங்கள் நிற்கின்றோம்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு இப்போது ஒரு யுத்தம் தேவைப்படுகின்றது. அந்த யுத்தத்தை நடத்துவதற்குரிய முழு வேலைத் திட்டங்களிலும் சிறிலங்கா அரசாங்கம் இறங்கியிருக்கின்றது. எங்களைப் பொறுத்த மட்டில் நாங்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட எங்களுடைய மக்களுக்கு ஒரு நிரந்தர குடியேற்றத்தை அமைத்து எங்களுடைய மக்களை ஒரு சரியான நிலையிலே இருத்தி அடுத்த கட்டத்தை நாங்கள் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் இந்தக் கட்டத்தில் சரியான முடிவுகளை எடுப்பதற்கு எங்களுடைய தேசத்தை விடுவிப்பதற்கும் இலட்சியங்களை அடைவதற்கும் தயாராக வேண்டும்.

சிங்கள மக்களின் அபிலாசையையும் தமிழ் மக்களின் அபிலாசையையும் ஒரே தட்டில் வைத்துப்பார்க்க முடியாது. உதாரணமாக கோழியின் அபிலாசையும் கீரியின் அபிலாசையும் வேறு. அதேபோன்று ஆட்டுக்குட்டியின் அபிலாசையும் ஓநாயின் அபிலாசையும் வேறு. நாங்கள் எங்களுடைய அபிலாசையை அடைய வேண்டுமென்றால் நாங்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்; நாங்கள் தான் எங்களுடைய அபிலாசையை நோக்கி நகர வேண்டும்.

நாங்கள் நகர்ந்திருக்கின்றோம்; செய்து காட்டியிருக்கின்றோம். உலகத்திலே மக்கள் எவ்வாறு இனிதாக வாழ்கின்றார்களோ அதே போன்று எங்களுடைய மக்களும் வாழக்கூடிய ஒரு சமாதானத்தை நாங்கள் உருவாக்கக் காத்திருக்கின்றோம்.

எங்களைத் தொடர்ந்தும் காக்கவேண்டிய ஒரு கட்டத்தில் நிற்கின்றோம். எனவே தான் நாங்கள் எல்லோரும் சேர்ந்து எங்களுடைய இறுதி இலட்சியத்தை அடைவதற்கு தலைமை எடுக்கின்ற முடிவை செயற்படுத்துவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார் அமிர்தாப். (த-352)






*கற்சிலைமடு அ.த.க.பாடசாலையில் பெற்றோர் விழிப்புணர்வுச் செயற்பாடு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்களில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

### கிராஞ்சிக்கும் வேரவிலுக்கும் இடையில்

## 30 வருடங்கள் திருத்தப்படாத 20 கிலோமீற்றர் நீளமான வீதி

முழங்காவில்,ஓக.10

கிராஞ்சி தொடக்கம் வேரவில் வரையான வீதி பலத்த சேதமடைந்து காணப்படுகிறது. கடந்த 30 வருடங்களாகத் திருத்தப்படாது உள்ள இந்த வீதியில் பயணிப்பவர்கள் பெருஞ்சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

மாரி காலத்தில் இந்த வீதியால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். இதனால் இவ்வீதியால் நடைபெறும் பஸ்சேவை நிறுத்தப்பட்டுவிடும்.

வீதியில் போக்குவரத்து செய்ய முடியாது பாடசாலை மாணவர்களும், நோயாளர்களும் பெருஞ் சிரமம் அடைவது, வருடந்தோறும் நடைபெறும் நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டது.

12 ஆம் கட்டை மன்னார் வீதி சந்தி தொடக்கம் வேரவில் கிராஞ்சி - பல்லவராயன்கட்டு போன்ற பிரதேசங்களை இணைக்கும் 20 கிலோமீற்றர் நீளமான இந்த வீதியை மழைகாலம் ஆரம்பிக்கும் முன்னர் திருத்தி போக்குவரத்துக்கு உரிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென இப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-323-204)

## செட்டிக்குளம் முகாமில் தங்கியுள்ள மக்களைக் குடியமர்த்த நடவடிக்கை

ஒட்டுசுட்டான்.ஓக.11

வவுனியா செட்டிக்குளம் உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த கால இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் செட்டிக்குளம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள அடம்பன் குளம், பாவற்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள நலன் புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீள் குடியமர்வுக்காகச் சொந்த இடங்களுக்குச் செல்லமுடியாத நிலையில் கடந்த 15 ஆண்டுகளுக்குமேலாக அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடி அமர்த்தும் நோக்கில் வவுனியா கணேசபுரம் பகுதியில் 100 குடும்பங்களும் பறையனாங்குளத்தில் 200 குடும்பங்களும் பேலியா பாம் பிரதேசத்தில் 300 குடும்பங்களும் மினிக் பாம் பகுதியில் 300 குடும்பங்களும் முதற்கட்டமாகக் குடியமர்த்தப்பட்டுள்ளன.

(த-314)

## நெல் அறுவடை, சூடு மிதிப்பு இரண்டுக்கும் ஒரே இயந்திரம்!

### வன்னி விவசாயிகளுக்கு வரப்பிரசாதம்

பரந்தன்,ஓக.10

விவசாயிகளின் பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வைக்கோலிலிருந்து நெல்லைப் பிரித்து வேறாக்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் அறிமுக விழா அண்மையில் வட்டக்கச்சி சில்வா வீதியில் உள்ள வயலில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ப.விஜிதரன், பொருண்மிய திட்ட இணைப்பாளர்களான கி.ஆறுமுகம், மு.கந்தசாமி ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

நெல் அறுவடை செய்து சூடுமிதிப்பதில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகின்றது. இதனால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதைக் கருத்தில் கொண்டு சீனாவில் தயாரிக்கப்பட்ட புதியரக இயந்திரத்தை (நெல்லைப் பிரித்து வேறாக்கும்) டேவிரக்ரர் நிறுவனம் இறக்குமதி செய்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுனத்தின் ஊடாக அறிமுகம் செய்துள்ளது. (352-202)

## பண்டிவிரிச்சானில் தேவைப் பகுப்பாய்வு

ஒட்டுசுட்டான்.ஓக.11

மன்னார் பண்டிவிரிச்சான் பகுதியில் வீடமைப்புத் தொடர்பான மக்கள் பங்கேற்புடனான தேவைப்பகுப்பாய்வு நடைபெற்றுள்ளது.

கடந்த 28ஆம் திகதி மன்னார் சின்னப் பண்டிவிரிச்சான் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்ற தேவைப்பகுப்பு ஆய்வில் பிரதேச செயலக அதிகாரிகள், மக்கள், உள்ளூர் அரச, அரசசார்பற்ற அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டு தேவைகள்பற்றிக் கலந்துரையாடியுள்ளனர். (த-314)

## ஒன்று கூடல்

யாழ்ப்பாணம் ஓக.11

நயினாதீவு சமூக, பொருளாதாரக் கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் ஒன்றுகூடல் நிகழ்வு நாளைமறு தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்குக் கொழும்பு பம்பலப்பிட்டி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட க்கு - கிழக்கு மாகாணசபை காணி அமைச்சின் மேலதிக செயலாளர் ப.க.பரமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஸும் சிறப்பு விருந்தினர்களாக வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் எ.இ.எஸ்.இராஜேந்திரா, வேலணை பிரதேச செயலர் எம். நந்தகோபாலன் ஆகியோரும் கலந்துகொள்வர். இதில் பட்டிமன்றம், நடனம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ஓ-202)

## குருபூசை

யாழ்ப்பாணம்,ஓக.11

முத்துக்குமாரு மயில்வாகன சுவாமிகளின் 20ஆவது ஆண்டு குருபூசை விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு செல்வச்சந்நிதி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரையை ஸ்ரீ சாரதா சேவாச் சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்துவார்.

(ஓ-202)


ஆடி மாத அதிரடி மலிவு விற்பனை


25% வரை விலைக்கழிவு


OCEANICK IMPEX

192, MAIN STREET, COLOMBO 11.
Tel: 2336720, 2327168, Wholesale: 2384131, Fax; 2326961
E.mail: oceanick192@yahoo.com



உங்களின் கவனத்திற்கு...



மீண்டும் ஒரு முறை திருகோணமலை,மாத்தளை நகரங்களில் இயங்கிவரும் Poshஅழகுக்கலை நிறுவன அழகுக்கலை நிபுணர் திருமதி A.M.ஆனந்த ரமணன் (Cosmetology & Beauty Therapy) அவர்களால் நடத்தப்படும் அழகுக்கலை வகுப்புகள்.

* பழைய மாணவர்களுக்கான மேலதிக பயிற்சி வகுப்புகள்
* Aroma Facial 7 வகைகள் 2500/=
* நவீன 15 வகையான Facial 2500/=
* Rebondins (சிகை நேராக்குதல்) 5000/=
* Permanant waves (தலைமயிர் சுருட்டுதல்) 3 வகை 4000/=
* Hair Cuts (சிறுவர்கள், பெண்கள்)... 5000/=

அழகுக்கலை டிப்ளோமாக் கற்கை நெறிகள்
அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!

தொடர்புகளுக்கு (Head Office):-
POSH BEAUTY PARLOUR
7/2, Arunagiri Road, Trincomalee.
T.P. 026 2224524, 077 616 7729

Branch:-
POSH BEAUTY PARLOUR
Kuluthavalai, Mathalai
T.P. 077 3053242, 0788791166

வகுப்புகள் ஆரம்பமாகும் நாள்கள் : 26/08/2005
இடம் :- உதயன் கேட்போர்கூடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் : - காலை 9.30 - 5.30 மணி வரை

பதிவுகளை முற்கூட்டியே உதயன் நிறுவனத்தில் செய்துகொள்ளவும். (38692)(525-14-15)



முதலாவது பிறந்ததின வாழ்த்து




திரு. திருமதி சுதாகரன் - அகல்யா தம்பதிகளின்
செல்வப் புதல்வன் அஷ்வின்
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (11-08-2005) வியாழக்கிழமை சுவிஸில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.
இவரை சுவிஸில் உள்ள அன்பு அப்பா, அம்மா, மாமா, யாழ்ப்பாணத்திலுள்ள அம்மம்மா, மாமா, அன்ரா, அப்பப்பா, அப்பம்மா, ஜேர்மனியிலுள்ள மாமா, அத்தை, மச்சான், மச்சி, சித்தாமார், சித்தி, கனடாவிலிலுள்ள மாமா, அத்தை, மச்சான், மச்சி மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள அம்மப்பாமார், அம்மம்மாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், அன்ராமார், மாமாமார், சித்தாமார், அத்தைமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல கலைகள் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு. (38684)(26.14.15)
தகவல்: நிக்ஷன் (மாமா).


## மலசலகூட மானிய விண்ணப்பம்

தென்மராட்சி ஓக.11

மலசலகூட மானியம் பெறுவதற்குரிய விண்ணப்பப்படிவம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வந்துள்ளது.

இந்த வருடம் மலசலகூடம் நிர்மாணிக்கும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பங்கள் இப்படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-117)


HOUSE FOR RENT -ARIYALAI

Renovated large bungalow, minutes from Jaffna town with water, Electricity and Parking facilities. Suitable for NGo's. Contact:# 0776435611 (38685)(21)



அவசர கலந்துரையாடல்

⌘ யாழ்.பல்கலையில் கடல்வளம் கற்று வெளியேறிய 4ஆம் அணி மாணவர்களுக்கானது.
⌘ காலம்: 12-08-2005 வெள்ளிக்கிழமை மு.ப.10மணி
⌘ இடம்: க.வ.அ.நிலையம்
⌘ பட்டச் சான்றிதழ், ஆசிரிய நேர்முகத் தேர்வுக் கடிதம் ஆகியவற்றுடன் சமுகமளிக்கவும்.

ம. புவனதாஸ்
செயலாளர், (மீ.ப.ச.)
(38707)(26.14)



University of Jaffna
Faculty of Agriculture

Admission of Public Officers for degree programme in B.Sc. Agriculture (2005/2006)

Application will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna for Admission of Public Officers for Degree Programme to follow B.Sc. Agriculture as internal students for the Academic Year 2005/2006.

1. The applicant should have pass the A/L examination in Biological Science and qualified to enter the University.

Or

Any other qualification, as may be approved by the faculty Board and the Senate.

And

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical Officer Grade in the field of Agriculture after obtaining Diploma course.

Age: Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Asst. Registrar, Examination & Admission Branch, University of Jaffna, on a payment of Rs.50/- each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.50 drawn in favour of the Bursar, envelope (for Rs.4.50) not less than 9"X4" Size

Date of closing is 30th September 2005

Application should be forwarded through the relevant heads of Department. If not those applications will be rejected.

Selected candidates will be called to sit for a written test and an Oral Examination.

No application will be entertained after the closing date of application.

(44500) - REGISTRAR.



ஜோதிடம்



Pandit Kr. Luxumy Narasimha

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடம் துர்க்காம்பாள் வசீகரண சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர் கணவன் -மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை - இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில், உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்குப் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: சிறி சவ்பாக்கியா இன்
விருந்தினர் விடுதி,
235/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(38503) (26.14.15)



கருமாரி அம்மன் ஜோதிடம்

ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன், அறை எண் 9,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(26.14.15)



திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி

| மண்ணகம் | விண்ணகம் |
| --- | --- |
| 1929 - 04 - 03 | 2004 - 08 - 11 |



அமரர் நவசிவாயம் டேவிட்ரத்தினம்

"ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதிருங்கள்"

ஆண்டொன்று ஆனாலும்
ஆறாத்துயர் எம்மை நித்தம் வாட்டுதப்பா!
எம்மைப் பாசத்துடன் பொறுப்பாகச்
சீராட்டி வாழ வழிகாட்டி
வாழவைத்த அன்புத் தெய்வமே!
எம்அன்புத் தந்தைக்கோர் காணிக்கை.

இல.740, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (38614)(26.14.15)
- குடும்பத்தினர்.



கண்ணீர்க் காணிக்கைகள்

08-08-2005 அன்று
அகாலமரணமடைந்த
செல்வி கீர்த்தனா வாமதேவன்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காய் கற்புலத்து மனோன் மணி அம்பாளை வேண்டுகிறோம்.

கொக்குவில் கிழக்கு.
(38708)(26.14.15)

பேரின்பநாயகம், சாமுண்டீஸ்வரன், கௌசிகன், அஜித்தன், பகீரதன், ஜனார்த்தனன், ஐங்கரன், செந்தில்குமரன்.

ஜயவர்த்தனவின் அபார ஆட்டத்தால்

# வென்றது இலங்கை!

## சுழற்பந்துவீச்சுக்குத் திணறியது இந்தியா




கொழும்பு,ஓக.11

மஹெல ஜயவர்த்தனவின் அபார ஆட்டம், சுழற்பந்து வீச்சாளர்களின் நேர்த்தியான பந்து வீச்சு மூலம் இந்தியன் ஓயில் கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை அணி. கொழும்பு ஆர்.பிரமேதாஸ மைதானத்தில் நேற்றுமுன் தினம் நடந்த இறுதி ஆட்டத்தில் இந்திய அணியை 18 ஓட்டங்களால் வீழ்த்தியது.

இந்த ஆட்டத்துக்கான இலங்கை அணியில் உபாதைக்குள்ளான வேகப்பந்து வீச்சாளர் வாஸ் மீண்டும் களமிறங்கினார். இவரது வருகையால் தில்ஹார அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

இந்திய அணியில் லக்ஷ்மன் நீக்கப்பட்டு சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தெரிவு செய்யப்பட்டார்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஜயசூரிய, அத்தபத்து ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். அணி 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது அத்தபத்து 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இவருக்கடுத்து களமிறங்கிய லொகு ஹெட்டிகே (9), சங்கக்கார (8) ஆகியோரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கவில்லை. நான்காவது விக்கெட்டுக்காக சனத்துடன் ஜோடி சேர்ந்த மஹெல ஆரம்பத்தில் சற்று நிதானித்து ஆடினார். மறுமுனையில் அதிரடியாக ஆடிய சனத் ஜயசூரிய 67 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

5 ஆவது விக்கெட்டுக்காக மஹெலவுடன், ஆர்னல்ட் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடியின் இணைப்பாட்டமே நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணிக்கு ஓட்டங்களைச் சேர்த் தது. 5 ஆவது விக்கெட்டுக்காக இவர்கள் 125 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.




சிறப்பாக ஆடிய ஜயவர்த்தன 83 ஓட்டங்களுடன் நெஹ்ராவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ஆர்னல்ட் 64 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார். கடைசிக் கட்டத்தில் சமிந்தவாஸ் சற்று சிறப்பாக ஆடினார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக நெஹ்ரா 59 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

வெற்றியிலக்காக 282 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலையில் பதிலளித்தாடிய இந்திய அணி ஷேவாக் இந்த ஆட்டத்தில் மிக அதிரடியாக ஆடி சிறப்பான ஆரம்பத்தை அணிக்குப் பெற்றுக் கொடுத்தார். லொகுஹெட்டிகே பந்து வீசிய ஆட்டத்தின் 5 ஆவது ஓவரில் 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் என 26 ஓட்டங்களைக் குவித்தார் என்பது இதில் குறிப்பிடத்தக்கது. எனினும், அரைச்சதத்தை இவரால் எட்ட முடியவில்லை. 48 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது வாஸின் பந்தில் இவர் போல்ட் ஆனார்.

மற்ற வீரர்களான கங்குலி (26), யுவராஜ் (42), டிராவிட் (72) ஆகியோர் சிறப்பாக ஆடினாலும் கடைசிக் கட்டத்தில் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென விழுந்தன.

இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 263 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதன்படி இந்த ஆட்டத்தில் 18 ஓட்டங்களால் அபார வெற்றியடைந்தது இலங்கை அணி.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக வாஸ், முரளி, சந்தன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் தில்ஷான் ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இலங்கை அணி சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய மஹெல ஜயவர்த்தன ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் தெரிவுசெய்யட்டார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிக் கிண்ணத்தை இலங்கை அணிக்கு வழங்கினார். (க-3)

## 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார் சனத் ஜயசூரிய



இலங்கையின் அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜயசூரிய சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லைக் கடந்தார்.

இந்திய அணிக்கெதிரான நேற்றைய இறுதியாட்டத்தில் 9 ஆயிரத்து 990 ஓட்டங்களுடன் களமிறங்கிய ஜயசூரிய 10 ஓட்டங்களைப் பெற்றபோது இச்சாதனை யைப் படைத்தார்.

இதன்படி 10 ஆயிரம் ஓட்டங்கள் கடந்த நான்காவது வீரரும், இலங்கையின் முதலாவது வீரர் என்ற சாதனையையும் ஜயசூரிய படைத்தார். இதற்காக இவருக்கு இலங்கை கிரிக்கெட் சபையால் 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும், விசேட ஞாபகார்த்த கேடயமும் வழங்கப்பட்டன.

(க-3)

## முத்திரை பதித்த உகண்டா வீராங்கனை




ஹெல்சின்கி உலக தடகள போட்டிகளில், பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டப் பிரிவில் உகண்டா வீராங்கனை டோகஸ் இன்சிகுரு தங்கம் வென்றார். இந்த நாட்டைச் சேர்ந்த ஒரு வீராங்கனை சர்வதேச போட்டிகளில் தங்கம் வெல்வது இதுவே முதல் முறை.

# தேசிய மட்டத்திற்குத் தெரிவானோர்


நிதர்சன்

வவுனியாவில் நடந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் சதானந்தன் நிதர்சன் முப்பாய்ச்சலில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் 12,14 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(3-190•203)

### 15 வயதுப் பிரிவு உயரம் பாய்தல்


பாலசங்கர்

வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் 15 வயது ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் எஸ்.பாலசங்கர் உயரம் பாய்தலில் முதலாவது இடத்தைப் பெற்றுத் தேசிய மட்டத் தடகளப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

(3-190-203)

### 17 வயதுப் பிரிவில் உயரம் பாய்தல்


மயூரன்

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் எ.மயூரன் உயரம் பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாயுள்ளார்.

(3-190-203)

# உலக தடகள சம்பியன் ஷிப் போட்டிகள்

பின்லாந்தில் உள்ள ஹெல்சின்கியில் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடக்கின்றன.

இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்காவின் லாரின் வில்லியம்ஸ் 10.93 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார். இதையடுத்து 100 மீற்றர் ஆண்கள் (காட்லின்), பெண்கள் பிரிவில் அமெரிக்கா முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. ஆண்களுக்கான 10, 000 மீற்றர் ஓட்டத்தில் எத்தியோப்பியாவின் கெனனிசா பெகேலி தங்கம் வென்றார். பெண்களுக்கான 3000 மீற்றர் ஸ்டீபிள் சேஸ் போட்டியில் டோர்கஸ் இன்சிகுரு தங்கம் வென்றார். இதன்மூலம் 22 ஆண்டு கால உலக தடகள சம்பியன் ஷிப் வரலாற்றில் உகண்டாவுக்கு முதல் தங்கம் பெற்றுத்தந்தார். நேற்றுமுன்தினம் நடந்த தடி ஊன்றிப் பாய்தல் தகுதிச் சுற்றுப் போட்டியின் போது, பின்லாந்து வீரர் மாட்டி மனோனன் குறுக்குச் சட்டத்தில் மோதிக் கொண்டார். உடனே உயரத்தை கணக்கிடும் கருவி உடைந்து கீழே விழுந்தது. இதனால் போட்டி 5 மணி நேரம் பாதிக்கப்பட்டது. ஆண்களுக்கான சுத்தியல் எறிதல் போட்டியில் பெலாரசின் இவான் திகோன் தங்கம் வென்றார்.

# உடுவில் மத்திய வி.கழகம் நடத்தும் கிரிக்கெட், கரபந்தாட்ட போட்டிகள்

பிறவுண் அன் கம்பனியின் அனுசரணையுடன் உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம், மென்பந்து கிரிக்கெட் மற்றும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளை நடத்தவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மென்பந்து கிரிக்கெட் 6 பேர் பங்குபற்றும் 6 ஓவர்களைக் கொண்ட சுற்றுப் போட்டியாகவும் கரபந்தாட்டம் செற்றப் முறையில் மின்னொளியிலும் நடத்தப்படும்.

விண்ணப்பப் படிவத்தைக் கழகக் காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு- அணி ஒழுங்குத் தேர்வுத் திகதி எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறும் என்றும் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(3-152-202)

# விளையாட்டு உபகரணங்கள் மாணவர்களுக்கு கையளிப்பு

வட்டக்கச்சி,ஓக11

வட்டக்கச்சி, மாயவனூர் கிராமத்தில் சிறுவர் செயற்றிட்டத்தின் கீழ் மாலை நேரக் கற்றலில் ஈடுபடும் மாணவருக்கு பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் 'பிறி' நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கியது.

இந்நிகழ்வு கடந்த 4ஆம் திகதி மாயவனூர் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

ஊரக வளர்ச்சித் தலைவர் சி.திவாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் மா.வினோ, மாயவனூர் கிராம சேவை அலுவலர் எஸ்.ரூபசிங்கம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கரபந்தாட்டம், வலைபந்தாட்டம் மற்றும் உள்ளக விளையாட்டுக்கான உபகரணத் தொகுதியைக் கிராமசேவை அலுவலர் எஸ்.ரூபசிங்கம் மாணவர்களிடம் கையளித்தார்.

(3-405-204)

# கற்சிலைமடு மாணவர்கள் இருவர் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு

முல்லைத்தீவு,ஓக.11

பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை மாணவர்கள் இருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

21 வயதுப்பிரிவில் குண்டெறிதல், பருதி வட்டம் வீசுதல் போட்டிகளில் ப.மேனுராஜூம் 15 வயதுப்பிரிவில் நீளம் பாய்தல் போட்டியில் வ.கீதவனும் தெரிவாகியுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இந்த வருடம் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஏனைய மாணவர்களின் விவரம் கடந்த 3ஆம் திகதிய உதயனில் பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த)



*ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்த தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழக போஷகர் அமரர் சி.சிவானந்தம், கழக முன்னணி வீரன் அமரர் பா.வசந்தராஜ் ஆகியோர் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் இடம்பெற்றன. இதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வல்வை அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ்வேந்தன் மங்கள விளக்கினை ஏற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி மயிலேறும்பெருமாள் கழகத் தலைவர் இராஜசிங்கம், யோகேந்திரதாஸ் ஆகியோரைப் படத்தில் காணலாம். (3-190)*

# கண்ணீர்ப் பூச்சிதறல்



## அமரர்
# தருமராசா சிவானந்தம்

தோள் கொடுத்த தோழா ! நன்று செய்த நண்பா!
வாள் எடுத்த தினவர் கொன்று சென்று போட்டனரோ?
ஆள் படையாய் நாமிருக்க - நீயொருவன்
பாழடைந்த பாதையிலே தனிவழியே போனாயோடா?

சேர்ந்து நின்ற நாள்கள் - எம்மை
சூழ்ந்து வந்து மயக்குதடா - ஆனந்தா!
வாழ்ந்து பார்க்கவில்லை வாழ்வை முடித்துவிட்டனரே!
இணைந்து நின்ற நட்பெல்லாம் துடித்து நிற்பதறியாயோ?

நண்பா!
தீயாய் எரியுதடா மனம் - நீ
தீயில் ஆகுதியானாலும்
தீய்ந்து போகாது எம் கவலை
தீர்ந்து போன உன் உயிருக்கு
தீர்த்துக் கட்டிய கயவருக்கு
தீர்வைத் தருவது யாரடா?

தோழா!
பட்டம் பெறக் காத்திருந்தாயே! - பெரிய
பட்டம் பெற்று விட்டாயோ - எம்மோடு
வட்டம் போட்டு அமர்ந்திருந்து
திட்டம் பல போட்டதை மறந்தாயோ?

பாலம் போட்ட பாதையில் வேலனுக்கு
பாற்காவடி எடுக்கக் காத்திருந்தாயே - கயவரின்
கல்லடிபட்டு இறந்துபோன உன்னை
பாடைக் காவடியாய் தூக்கிச் செல்வரோ?
ஐயோ! பொறுக்குதில்லை நெஞ்சம்
தோழா! எழுந்து வந்து தேற்றடா எமை!

ஆனந்தா! - இது எம்
நெஞ்சில் சுட்ட வடுவடா - உனை
வஞ்சங் கொண்டு அழித்தனரோ?
சட்டம் செய்யப் போவதென்ன
கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போமடா!

நினைவழியா வேதனைத் தடங்களோடு
விழிமூடிவரும் உனைப் பார்த்து
விழிமூடாதிருக்கின்றோம் - அடேய்!
நெஞ்சு கதறுதடா ! வார்த்தைகள் வெடிக்குதில்லை
வெடிக்கும் நாள் வரும் வரை
காத்திரு நண்பா!

- ஆருயிர் நண்பர்கள். (38722)

## மண் மகிழ கண் நெகிழ

**02-02-1977** **08-08-2005**

அரச படைகளால் அழிக்கப்பட்ட

# யாழ்.பொதுநூலகத்துக்கான நஷ்டஈட்டை காலதாமதமின்றி வழங்கக் கோரிக்கை

## ஜனாதிபதியிடம் தமிழ்மக்களின் அமையம் விடுத்தது

அரச ஆயுதப் படையினரால் அழிக்கப்பட்ட யாழ். பொதுநூலகத்திற்கான நஷ்டஈட்டுத் தொகை 85 லட்சம் ரூபாவை அடுத்த ஆண்டுக்குள் - தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய முன்னர் - அரசு தர வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கையை மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அமையம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாநகரசபை பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொதுநூலகம் அரச ஆயுத படைகளால் அழிக்கப்பட்டது. அதன்போது 85 லட்சம் ரூபா மதிப்புள்ள புத்தகங்கள், 4 லட்சம் ரூபா மதிப்புள்ள தளபாடங்கள், 18 லட்சம் ரூபா மதிப்புள்ள கட்டடம் ஆகிய சொத்துக்கள் அழிவடைந்தன.

இதற்கான நஷ்டஈட்டுக் கோரிக்கையை ஆய்வுக் குழுவிடம் சமர்ப்பித்தபோது முழு நஷ்டஈட்டையும் வழங்கவேண்டும் என அது சிபார்சுசெய்தது.

இந்தச் சிபாரிசுக்கமைய 20 லட்சம் ரூபா ஜனாதிபதி நிதியிலிருந்து நஷ்டஈடாக 1982, 1983 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டது.

புத்தகங்களுக்கான நஷ்டஈடான 85 லட்சம் ரூபாவும் கட்டட மீளமைப்பு பூர்த்தியானதும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மீளமைப்புப் பணிகள் பூர்த்தியாகி இன்று நூலகம் செயற்பட்டுவருகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதியாகிய தங்களின் பதவிக்காலம் அண்மைக்காலத்தில் காலாவதியாக இருப்பதால் இந்த நஷ்டஈட்டுத் தொகையைக் காலதாமதமின்றி வழங்கித் தங்களதும், தங்களதுஅரசினதும் விசுவாசத்தை எடுத்துக்காட்டுமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஒ-202)



## சமய சந்நிதிகளில்



யாழ்ப்பாணம்,ஓக.11

இணுவில் கிழக்கு அண்ணமார் பாமா ருக்மணி சமேத வேணு கோபாலர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தினமும் விசேட பூசைகள் நடைபெற்று பாமா ருக்மணி சமேத அண்ணமார் பெருமான் வீதியுலாவரும் நிகழ்வு இடம்பெறும்.

திருவிழாத் தினங்களில் தொடர்ந்து சிவானந்தவாரிதி வ.குமாரசாமி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஒ-204)

* * *

சுழிபுரம்,ஓக.11

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுந்தரர் தேவாரம் ஓதுதல், புராண படனம், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவார நூலுக்கு விசேட பூசைசெய்து வீதியுலா வருதல் என்பன நடைபெறும். (ஒ-28-204)

* * *

வலி.தெற்கு,ஓக.11

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயிலில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அழகிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிற்பாசாரியார் நடராசா சிவபாலனின் கைவண்ணத்தில் இந்த அழகிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-152-204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்ப்பாணம் வண்ணை - பிறவுண் வீதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் அம்பாளுக்கு விசேடபூசைகள் இடம்பெறும். (ஒ-204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.11

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 7 மணிக்கு தெய்வீகச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (ஒ-15-204)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.11

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் மகிமை விழா எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அருட்திரு. அ.இம்மானுவேல் அ.ம.தி. அடிகளாரின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிற்பகல் 4.30 மணிக்கு தேவைநாடுபவர்களுக்கான திருப்பலி இடம்பெறும். (ஒ-202)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.11

ஸ்ரீ இராகவேந்திரர் சுவாமிகளின் ஜனன விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ ராகவேந்திரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 334 ஆவது பிருந்தாவன பிரவேச நிகழ்வும் நண்பகல் 12 மணிக்கு தயிர் பிரசாதம் வழங்கும் நிகழ்வும் மாலை 5.30 மணிக்கு சுவாமிகள் பற்றிய உரையும் இடம்பெறும்.

எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 5 மணிக்கு திருக்கதவு திறத்தல் நிகழ்வு இடம்பெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதிவரை அபிஷேக ஆராதனைகள், கலைநிகழ்வுகள் என்பன நடைபெறும். (ஒ-202)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.11

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (204)

## தெய்வீக இசையரங்கில் இன்றைய நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.11

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் தெய்வீக இசையரங்கு நிகழ்வை நடத்திவருகிறது.

இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு கே.அனந்தகோபனின் கெஞ்சிற் கச்சேரி நடைபெறும். பி.ரஜீந்திரன் - நாதஸ்வரம், எம்.விஸ்வமூர்த்தி - வயலின், பரமசாமி கிருபாகரன் - மிருதங்கம், என்.மாதவன் - கடம், என்.சதீஸ்குமார் - முகர்சிங் ஆகியோர் பக்கவாத்தியங்கள் வாசிப்பர். (204)



## சாயி சிந்தனை

### பக்தனின் முதற் கடமை

*ஒரு பக்தனிடம் முக்கியமாக எதிர்பார்க்கப்படும் தகுதி சகிப்புத் தன்மை. பக்தி என்றால் என்ன? நிறையப்பேர் இதனைப் பற்றி தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிறார்கள். சில சிலைவடிவங்களை வணங்குதல், சில விரதங்களைக் கடைப்பிடித்தல், சில சடங்குகளைச் செய்தல் ஆகியவைதான் பக்தி என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது தவறு. பக்தனின் முதல் கடமை என்ன தெரியுமா? சகிப்புத் தன்மையை நடைமுறைப்படுத்துவது தான்.*

*சத்தியத்தை முழுமையாகப் பின்பற்றி வாழ்க்கையை நடத்துதல் என்பது உண்மையான தவம். இன்று, மனிதனுக்கு இந்தத் தத்துவம் மறந்துபோய்விட்டது. சகிப்புத் தன்மை என்ற நற்குணமிருந்தால் அது மக்களை நல்ல மேன்மையான செயல்களில் ஈடுபடும்படி தூண்டும். இந்த உயர்குணம் மற்றவர்களுக்கும் கற்பிக்கப்பட வேண்டும். அதன் மூலம் அவர்கள் அதனைத் தங்கள் வாழ்வில் கடைப்பிடிக்கமுடியும்.*

*(ஆதாரம் : சனாதன சாரதி)*




## நல்லூர் உற்சவ காலச் சிறப்பகம்



### அருள் தருவாயே!

*நாற்றிசையும் போற்று முயர்*
*நல்லூர் தன்னிலே*
*சாற்றும் மணி ஓசை கேட்டு*
*தேடிவந்தோமே*
*பாற்கடலின் நஞ்சையுண்ட*
*பரமனின் பாலா*
*ஊற்றினைப் போல் வரமளித்து*
*அருள் தருவாயே!*

*- அரியாலையூர் சி.சிவதாசன்.*

### நல்லைக் கந்தா அருள் செய்குவாய்!

இராகம்: ஹம் சத்வனி — தாளம்: ஆதி

*பல்லவி*
*தமிழாலுன் புகழ் பாடித் துதிக்கின்றேன்- முருகா*
*தயவாய் என் துயர் தீர்ப்பாய் அழகா- இனிய*
*(தமிழால்)*

*அனுபல்லவி*
*பாங்கான தமிழ் ஞானப்பழம் நீ அன்றோ*
*பண் பாட பதம் நாட அருள்வாயன்றோ- இனிய*
*(தமிழால்)*

*சரணம்*
*அஞ்ஞானந் தனை நீக்கி அருள்வாய் முருகா- நீ*
*மெஞ்ஞானச் சுடரேற்றி விடுவாய் குமரா*
*அழைத்தோர்க்கு அருள் செய்வாய் நல்லைக் கந்தா- உன்*
*நலம் நாடித் தொழுகின்றேன் அருள்வாய் தினமும் - இனிய*
*(தமிழால்)*

*- நல்லூர் சுபா*

### நித்திய சமாதானம் நிலைத்திடச் செய்!

*நித்தமும் நினைந்துருகி வழிபடும் அடியவர்க்கு*
*நீடித்த ஆயுளும் நல்வாழ்வும் தருபவனே,*
*நிகரில்லாப் புகழ் கொண்ட நல்லூரின்*
*முத்தாக இலங்குகின்ற முருகப் பெருமானே!*
*இவ்வுலகில் பொல்லாத் தனங்களும்*
*போலி வேஷமும் மேலோங்கி நிற்குதையா*
*சத்திய நெறியும் தர்மமும் சாந்தியும்*
*தழைத்திட அருள் புரிகுவாய்*
*சக்தி உமைபாலனே சரவணபவகுகனே,*
*யுத்த மொன்றில்லாத நித்திய சமாதானம்*
*நிலைத்திடச் செய்து நிம்மதி தந்தருள்வாய்!*
*நல்லையிலே வீற்றிருந்து அருள்பொழியும் கந்தனே!*

*- எம்.இந்திராணி, ஏழாலை.*

### புள்ளிமயில் மீதேறி துள்ளிவந்திடுவாய்!

*பல்லவி*
*நல்லூரின் திருவீதி நாற்றிசையும் புகழ் பாடும்*
*எல்லோரும் வாருங்கள் ஏற்றியவன் புகழ்பாட*

*அனுபல்லவி*
*பச்சைமயில் மீதேறி பவனிவரும் பாலகனே*
*அச்சமின்றி தொழுது நிற்க அருளிடுவாய் நல்லூரா*
*(நல்லூரின்..)*

*சரணம்*
*வேலேந்தி வினைய கற்றி வேண்டு வரமருள்வாய்*
*தோளேந்தி காவடிகள் தூக்க மிடி துடைப்பாய்*
*குன்று தனில் குடியிருக்கும் கொஞ்சு மொழி பாலா!*
*நின்று தலைவணங்கிடுவோம் நிந்தனருள் தாராய்*
*(நல்லூரின்...)*

*ஆறுபடை வீடுடைய அழகொளிரும் முருகா!*
*தேறுதலைத் தந்திடுவாய் தெய்வானை மணாளா*
*வள்ளிதனைப் புணர்ந்திட்ட நல்லை உறை முருகா!*
*புள்ளிமயில் மீதேறி துள்ளி வந்து அருள்வாய்*
*(நல்லூரின்...)*

*- கு.சரவணபவானந்தன்.*

### நல்லூரான் திருவடியை நாடு!

*நல்லூரான் திருவடியை நாடி*
*நாமெல்லாம் ஒன்றாகக் கூடி*
*வல்ல திருப்புகழைப் பாடி*
*வணங்குவோம் உயர்கொடியேறுநாளில்*
*ஆழிப்பேரலை வந்து அடித்தாலும்*
*அடுத்த போர் மூண்டு வெடித்தாலும்*
*சுனாமி சுற்றி வந்துதைத்தாலும் கந்த*
*சுவாமி கைவிடா ரென நம்பி*
*நாளும் துதித்திடு மனமே நல்லூர்*
*வேலின் அருள் கூடும் நிஜமே!*

*- நல்லூர்க் கந்தையா, ஆசிரியர்.*

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர்களும் தற்போது பிரான்ஸில் வசிப்பவர்களுமான

**திரு.திருமதி குகருபன்-லோகினி தம்பதிகளின் செல்வப்புதல்வி பிருந்தா (அபர்னா)**



தனது முதலாவது பிறந்த நாளை இன்று (11.08.2005) வியாழக்கிழமை பிரான்ஸில் இருக்கும் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

பிருந்தாக்குட்டியை அன்பு அப்பா, அம்மா இலங்கையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, பிரான்ஸில் இருக்கும் அம்மப்பா அம்மம்மா, ஜேர்மனியில் இருக்கும் பெரியமாமா (குட்டி), பெரியத்தை (குகறூபனா), மச்சான்மார் லோஜன், லக்ஷன் இலங்கையில் இருக்கும் சித்தப்பா (குகதீபன்), சித்தி (நளினி), பெரியக்கா நதிஷனா, சின்னக்கா நதீபனா, குட்டிச்சித்தப்பா (குகசீலன்), சின்னத்தை (குகசோபனா), பிரான்ஸில் இருக்கும் பெரியமாமா(ரவி), பெரியமாமி (மாலதி), மச்சான் பிறேமன் மற்றும் லண்டனில் இருக்கும் ஜெயாமாமா, பிரான்ஸில் இருக்கும்தயாமாமா, பவன்மாமா, பசீர்மாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பலகலைகளும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி அவர் நலமுடன் இருக்க வேண்டுமென அரியாலை சித்தி விநாயகரை வேண் டுகின்றனர்.

செ. கந்தசாமி (அப்பப்பா), க.குகனேஸ்வரி (அப்பம்மா)
"குககந்தகிரி"
28, சின்னாலங்கண்டு வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
K.Kugaruban.
7-PLOCEGEDLES - Pompidow
93160 - Noisyle Grand, France.

## பிருந்தா (அபர்னா)

(38643)(53-04-15)

## பட்டப்பின் டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பகுதி II மாணவர்களுக்கான அனைத்துப் பரீட்சைகளும் நாளை வெள்ளிக்கிழமை, முன்னர் அறிவிக்கப்பட்ட நேரத்தில் வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

உரியவர்கள் பரீட்சைகளில் கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வியாபாரக் கற்கைகள் பீட பீடாதிபதி இ.நந்தகுமார் அறிவித்துள்ளார்.

(ஐ-204)

## அறிவித்தல்

**சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் வதியும் *சங்கரசிவம் பெண் இந்திரமதி* ஆகிய நான் நொத்தாரிஸ் மா.தியாகராசா அவர்களால் அத்தாட்சிப் படுத்திய 5477**

**9-1-2003 இல தத்துவப் பத்திரமூலம் கந்தையா பஞ்சலிங்கம் அவர்களுக்கு எனது கொக்குவில் கிழக்கில் உள்ள வீடு, தோட்டம், வளவு என்பவற்றை மேற்பார்வை செய்ய ஒப்படைத்திருந்தேன். இன்றில் இருந்து 11-08-2005இல் இருந்து குறித்த தத்துவப்பத்திரத்தினை இத்தால் இரத்துச் செய்து குறித்த தத்துவப் பத்திரத்தினடிப் படையில் செயற்படவேண்டாம் எனவும் அங்ஙனம் ஏதும் செய்யில் அது வலுவற்றதெனவும் வெளிப்படுத்துகின்றேன்.**

இதனை வரைந்தவர்
M .*தியாகராஜா*
சட்டத்தரணி.

உண்மை உள்ள
*இந்திரமதி சங்கரசிவம்*

(38705)(26-14-15)

## கண்ணீர் அஞ்சலி

### கீர்த்தனா வாமதேவன்



எமது கல்வி நிலைய அதிபர்
சண்.வாமதேவன்
அவர்களின் அன்புப் புதல்வி
கீர்த்தனாவின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

ஆசிரியர் **ச.நவநீதன்**
கோண்டாவில் மேற்கு.

(38729)(26.14.15)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக.11

கோப்பாய் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று கோப்பாய் முன்பள்ளி ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

(202)

## ஒத்து மாறல்

**வவுனியா, இறம்பைக்குளம் மகளிர் தேசியப் பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலைக்கு உடனடியாக மாற விரும்புகின்றார். மாற விரும்புபவர்க்ள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.**

222 7730, 077-6252882

(38727)

## பெண் ஊழியர் உடனே தேவை

**தொலைத்தொடர்பு, போட்டோ பிரதி ஆகியவற்றில் அனுபவமுள்ள பெண் ஊழியர் உடனே தேவை.**
**நேரிலோ அல்லது தொலைத் தொடர்பிலோ தொடர்புகொள்ளலாம்.**
**கணேஸ் கொமினிக்கேஷன்,**
மானிப்பாய் வீதி,
கோப்பாய்.

(38720) ☏ *021 4590881*

உ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் பார்த்திப வருஷம் ஆடி மாதம் 17ஆம் திகதி (02.08.2005) இல் சிவபதமெய்திய

### ஸ்ரீமதி தியாகராஜக்குருக்கள் நாகம்மா

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம் (*11.08.2005*) வியாழக்கிழமை
மு.ப.10 மணி
ஏகோதிஷ்டம், மாசியம் (*12.08.2005*)
வெள்ளிக்கிழமை
சபிண்டீகரணம்(*13.08.2005*) சனிக்கிழமை
கிருஹயக்ஞம் (*14.08.2005*) ஞாயிற்றுக்கிழமை

**மேற்படி கிரியைகளிலும் 14.08.2005 ஞாயிறு நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் தங்களையும் தங்கள் குடும்பத்தினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தானம்,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

**- குடும்பத்தினர்.**

(சி-44009)(26.14.15)

## தேவை

- விற்பனையாளர்
- போட்டோ சொப் (கணனி) அனுபவஸ்தர்

மேற்காணும் வேலைகளுக்கு ஆள் தேவை.

அனுபவமுள்ள, பழக ஆர்வமுள்ள 30 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சகல விவரங்களுடன் கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும் (யாழ்.நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது).

தொடர்புகளுக்கு: விளம்பர இல. **2666,**
மே /பா உதயன், யாழ்ப்பாணம்.

(சி-44009)

உ
சிவமயம்

*அன்னை மடியில்*
*07 - 09 - 1940*



*ஆண்டவனின் திருப்பாதங்களில்*
*26 - 07 - 2001*

### அமரர் வயிரமுத்து வரப்பிரசிங்கம்

(ஓய்வுபெற்ற அஞ்சலக ஊழியர், தெல்லிப்பழை)

**திதி : ஆடி பூர்வபக்க ஷஷ்டி**

**நாள்கள் பல நகர்ந்து மாதங்கள் வருடங்களாகி நான்காண்டுகள் ஆகிவிட்டதே அப்பா அன்பால் அறிவூட்டி பாசமெனும் கூட்டில் வளர்த்து ஒவ்வொரு நிமிடமும் அறிவுரைகள் பயின்று எம்மை வையகத்தில் வாழவைத்தீர்கள் அப்பா. நீங்கள் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் உங்கள் கனவுகள் என்றென்றும் நனவாகும் பாசத்தந்தையே...**

***உங்கள் ஆத்மா சாந்திபெற கார்த்திகைக் குமரன் அருள்புரிவான்***

நி.மு: கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
த.மு: ...ளையோடை அம்மன்வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

மறையாத நினைவுடன் மனம் வாடும்:
**மனைவி, மக்கள்,**
**மருமகன், சகோதரர்கள்.**

(38730)(26-14-15)

## மரண அறிவித்தல்

### இராமு கந்தையா

**(காத்தியப்பா)**

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமு கந்தையா அவர்கள் நேற்று (10.08.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (11.08.2005) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
திருமதி க.தங்கம்மா
(மனைவி),
திரு. மு.தெய்வேந்திரம்
(மைத்துனர்).

(38733)(26.14.15)

## யாழ் .நகரில் இருந்து குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவை (PARCEL SERVICE)

வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்காரப் பொருள்களை குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் பொருள்களை நாமே பொதிசெய்து அனுப்புகின்றோம்.

### கட்டணவிவரம் விமானமூலமான

ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், பிராங்போட், இத்தாலி.) } 1kg 650/=
கனடா - 1 kg 1050/=

குறிப்பு:- எம் மூலமாக அனுப்பப்படும் பொருள்கள் அந்த அந்த நாட்டில் அவர்களது வீடுகளில் ஒப்படைக்கப்படும். வேறு எது விதமான மேலதிகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

* வெகுவிரைவில் ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ்) மூன்று நாள்களில் பொருள்களை அனுப்பிவைப்போம். கனடா நான்கு நாள்கள் மட்டும். ஒரு பொதியின் அளவு குறைந்தது **5Kg** இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:-

**RAIN BOW TRAVELS & TOURS**
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(அபிநயா நகைமாடத்துக்கு மேல்) T.P.:- 0777 328219

இவ்வருடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 3 இலட்சம் பேருக்கான இலவச ஆங்கில டிப்ளோமாவுக்கான

முதலாவது இலவச ஆங்கில

## நேரடி வகுப்பு

ஆங்கிலத்திற்கான சூழல் உருவாக்குவதை நோக்கமாகக்கொண்ட SAAMSTECH இன் இலவசத் தொலைக்கல்விப்பாடநெறிக்கு விண்ணப்பித்தோருக்கான முதலாவது நேரடி வகுப்பு வரும் 20.08.2005 சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப் பாடநெறியினை மேற்கொள்வோர் இலவச வகுப்புகளில் கலந்து அடுத்த புத்தகங்களை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.

**இரண்டு மணிநேர நேரடி வகுப்பு**

30 நிமிடம் : *அடிப்படை வசனங்களில் முழுமையான தேர்ச்சி*
30 நிமிடம் : *கதைத்தலுக்கான சொல்வள விருத்தியாக்கம்*
50 நிமிடம் : *உரையாடல் அடிப்படையிலான பயிற்சி*

இந்த 2 மணிநேர இலவச வகுப்பு மூலமாக கதைத்தலுக்கான முழுமையான அடித்தளம் விருத்திசெய்யப்படுகிறது.

இடம : யாழ் மத்திய கல்லூரி
காலம : 20.08.2005 (சனிக்கிழமை)
நேரம் : 9.00-11.00.11.00-1.00.2.00-4.00.4.00-6.00

18.08.2005 வரை புதிதாக சேருவோரும் இலவச நேரடி வகுப்பில் கலந்துகொள்வதோடு புத்தகங்களை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

**குறிப்புகள் :** யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இப்பாடநெறியின் சேருவோருக்கு மட்டும் அனுமதி முதல் சான்றிதழ் வரை பாட புத்தகங்கள், நேரடி வகுப்புகள் மற்றும் பரீட்சை உட்பட முற்றிலும் இலவசம். திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களுக்கான இலவச பாடநெறி இவ்வருடம் October மாதம் ஆரம்பமாகும்.

வவுனியா, மன்னார், கொழும்பு, மலையகம் மற்றும் இலங்கையின் பிற பாகங்களிலிருந்து புதிதாக விண்ணப்பிப்போர் SAAMSTECH என்ற பெயருக்கு JAFFNA தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூபா 100/- இற்கான காசுக்கட்டளையினை இணைக்க வேண்டும்.

*வகுப்பு பற்றிய மேலதிக விபரங்களுக்கு* : **021 - 4591571**

**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.**

3 மாத காலத்தில் World Class தராதரம் பெற அரியசந்தர்ப்பம்.

**City & Guilds London U.K.**
**Examination December 2005**

**Telecom. Systems Engineering**
Certificate Level - with full practicals
Course Contents: Computer Technology Mobile Radio-Cellular Phone -PSTN-Radio-TV-Optical Fibre-Digital Network & Data Communication

உங்கள் அனுமதிகளுக்கு 09,10/08/2005 அன்று JTI, No. 7 Palaly Road, Jaffna.(T.P: 0212223335)இற்கு நேரில் வரவும்
**APSS International,** Colombo 06.T.P: 011-25361587

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 22 - 02 - 1928 |  | 11 - 08 - 2004 |

### மார்க்கு அலெக்சாந்தர்

நீங்காத உங்கள் நினைவால்
இப்போதும் எம் கண்ணில் ஈரமது மாறவில்லை
எப்போதும் உம் நினைவால் ஏங்கியே
இதயமது துடித்திருக்க
எம்மைப் பிரிந்து சென்றாயோ?

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி,
கரவெட்டி. (38732)(38-12-16)

என்றும் உங்கள்
நினைவுடன்
குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 703 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 09-8-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4658175-4673941 |

வெற்றி இலக்கங்கள்
**12 20 52 54**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.33,96,600/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 41,33,700/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,30,073 | 10/- | 33,00,730/- |
| 2.இலக்கங்கள் | 30,333 | 20/- | 6,06,660/- |
| 1.இல லக்கினம் | 30,031 | 30/- | 9,00,930/- |
| 2.இல லக்கினம் | 2,750 | 100/- | 2,75,000/- |
| 3.இலக்கங்கள் | 797 | 500/- | 3,98,500/- |
| 3.இல லக்கினம் | 83 | 5,000/- | 4,15,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 33,96,600/- | - |
| | | மொத்தம் | 61,96,820/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 72,49,070/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 72,49,070/- தொடர் இல. 5615820 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2005 ஆகஸ்ட் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும், வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 4664144-2-77 |
| கேகாலை | 4669598-5-89 |
| குருநாகல் | 4663229-7-39 |
| பதுளை | 4662445-4-02 |
| மொனராகலை | 4662691-4-69 |

## மரண அறிவித்தல்

### கந்தையா சிதம்பரப்பிள்ளை

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபருமாகிய கந்தையா சிதம்பரப்பிள்ளை நேற்று (10.08.2005) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரர் கந்தையா, காலஞ்சென்ற திருமதி கந்தையா - வள்ளியம்மையின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நீலவாணி, சுரேஸ் (ஆஸ்திரேலியா), நீலரஞ்சினி (கனடா), நீலகாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுருநாதனின் (கரணவாய் தெற்கு) சகோதரனும், காலஞ்சென்ற அருணன், பாலேந்திரன் (கனடா), சிவனேஸ்வரன் (கனடா), லலிதாம்பிகை (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், Dr. தங்கராசா (அமெரிக்கா), தேவராசா, திருமதி பேபி சிவகுருநாதன் ஆகியோரின் மைத்துனரும், திருமதி ஜெயாஞ்சலி தங்கராசா (மைத்துனரின் மனைவி - அமெரிக்கா), அபிராமி, ஹரிஸ், ஜனார்த்தனன், விஸ்ணுவர்தனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஜயரட்ண மலர்ச்சாலை, பொரளையில் நடைபெற்று மாலை 5 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக பொரளை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-44017)(38-12-16)

*21/1A, Fiancis Road,*
*Wellawatte. T.P: 2586609*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், நாயன்மார்க்கட்டு, இல, 25/1, இராஜேஸ்வரி வீதியைச் சேர்ந்த தர்மலிங்கம் நந்தகுமார் என்பவருடைய தேசிய அ.அ. (இல.701171268V), விசேட அ.அ. (இல.0902000338) என்பன பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் தவறிவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (38736)(38-16-12)

## கணனி கணக்காளர் தேவை

எமது நிறுவனத்துக்கு கணனியில் அனுபவம் மிக்க கணக்காளர் (ஆண், பெண்) தேவை.
**உடனே நேரில் வரவும்.**
தொடர்பு :
**AMT ரான்ஸ்போட் சேவிஸ்,**
**இருபாலைச் சந்தி,**
**கோப்பாய்.**
**T.P:- 021 222 5784**
(38731)(38-16-12)

## ஓடுகள் விற்பனைக்கு

எம்மிடம் பாவித்த,நல்ல நிலையிலுள்ள 3000 ஓடுகள் விற்பனைக்குண்டு. விரும்புவோர் கீழுள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும்.
*மானிப்பாய் பெற்றோல் செற் முன் ஒழுங்கை ,*
*மானிப்பாய்.* (38737)(38-16-12)

## சக்சஸ் மல்ரி ஹவுஸ்
**S.M.H**
முதலாவது அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு
இல.: – 235
பெயர்:– சி.நிசாந்தன்
முகவரி :– மீசாலை வடக்கு, கொடிகாமம்.
நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளவும்.
புத்தூர் சந்தி,
மீசாலை. (சி-44021)(38-16-12)
**S.M.H**
உரிமையாளர்கள்.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

## மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா மற்றும் பலர் நடித்த
**பிரியசகி**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30.

## ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)

## நாதன்ஸ் சினிமா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின சினேகா,கிரண், வடிவேல் நடித்த
**சின்னா**
கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.)

## மரண அறிவித்தல்

### அப்பாக்குட்டி முருகையா



இணுவிலைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரும் விசகடி வைத்தியருமான அப்பாக்குட்டி முருகையா அவர்கள் நேற்று (10.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*K.K.S வீதி,*
*இணுவில்.* (சி-44023)(38-12-16)

தகவல்:
மகன்.

## மரண அறிவித்தல்கள்

### சிவதாஷன் சுரேந்திரன்

மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவதாஷன் சுரேந்திரன் நேற்றுமுன்தினம் (09.08.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சிவதாஷன் - பகீரதி தம்பதியரின் அன்புப் புதல்வனும் மகாலக்சுமியின் அன்புக் கணவனும் சதீஸ்கண்ணா (விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ்.பல்கலைக்கழகம்), சுமரஞ்சனி (சுவிஸ்), டினேஸ்குமார் (யூனியன் கல்லூரி, 2006, கலைப் பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவானந்தராஜாவின் (சுவிஸ்) அருமை மாமனாரும் கௌசிகா, ஜிந்துஜா ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரி யைக்காக கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.* (38703)(38-16-12)

தகவல்:
மகன்.

### பொன்னுக்கோன் சாவித்திரி



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுக்கோன் சாவித்திரி 07.08.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணபிள்ளை - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா பொன்னுக்கோனின் அன்பு மனைவியும் இரத்தினம் (அமரர்), செல்லம்மா, பார்பதி (அமரர்), பூதப்பிள்ளை, (அமரர்). ஆனந்தன், வைரமுத்து (அமரர்), இராசபூபதி, சிவமணி, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரேஸ்வரன் (கொழும்பு), கருணதாஸ்(கட்டடநிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஜெயக்கொடி (சுவிஸ்), முருகதாஸ் (சுவிஸ்), பூங்கொடி (சுவிஸ்), விஜயராஜ் (டென்மார்க்), சிவதாஸ் (சுவிஸ்), குகதாஸ் ஆகியோரின் அன்புத்தாயாரும் சரோஜாதேவி (கொழும்பு), மங்களேஸ்வரி, (திருநெல்வேலி), புஸ்பராஜ் (சுவிஸ்), உதயராணி (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்) ,கௌரி (டென்மார்க்), சுதர்ஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் யதீசன், கஜேந்திரன் (கொழும்பு), யதுப்பிரியா, தனுப்பிரியா (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி), மிரோஜன், கிரோஷன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி), (திருநெல்வேலி), பிரதீஷ், ஜதீஷ், ஆர்த்தி (சுவிஸ்), சாந்தமி, தமிசான் (சுவிஸ்), லாவண்யா, ஆரண்யா,சரண்யா (சுவிஸ்), நிவேதா, அசின், சுமி (டென்மார்க்), ஸ்ரீலா, ஸ்ரீஜன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**214/11, இராமநாதன்வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி-44020)(38-16-12)

தகவல்:-
பிள்ளைகள்,
மருமக்கள்.

### தம்பிமுத்து நல்லையா

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து நல்லையா 09.08.2005 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கண்மணியின் அன்புக்கணவரும் இராசரத்தினம் (இலங்கை வங்கி - சுன்னாகம்), அன்னலட்சுமி, செல்வரத்தினம், விசயரத்தினம், பாக்கியலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யாசோதாதேவி, தியாகராஜா (ஓய்வுபெற்ற ஊழியர் இலங்கை வங்கி ) அமிர்தாஞ்சனி, சந்திரகுமாரி, கண்ணன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.08.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 4 மணிக்கு ஆரவிரப்புலம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நரசிங்க வைரவ கோயிலடி,*
*அச்செழு.* (38741)(38-12-16)

தகவல்:
ந.செல்வரத்தினம் (மகன்).

### திருமதி அருளானந்தம் சுகிர்தராணி (தங்கம்மா)

புத்தூரைச் சேர்ந்த திருமதி அருளானந்தம் சுகிர்தராணி நேற்று (10.08.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தத்தின் அன்பு மனைவியும் வில்லியத்தின் அன்புத் தாயும் சசிகலாவின் அன்பு மாமியும் மகி, கபிரியேல், பகி, மிதில், திவியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அந்திராணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புத்தூர் கிழக்கு,*
*காளியானை.* (38742)(38-12-16)

தகவல்:
மூ.வைரவநாதர்.

### வைரவன் வேலன்

சிங்கைநகர், புலோலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைரவன் வேலன் நேற்று (10.08.2005) புதன்கிழமை காலமானார்.


அன்னார் வைரவன் - வைரவி தம்பதியரின் அன்பு மகனும் வள்ளியின் பாசமிகு கணவரும் சின்னத்துரை, லட்சுமி, வைரவநாதன் கிருஷ்ணபிள்ளை, தங்கராசா, செல்லம்மா, மயில்வாகனம் (டென்மார்க்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காகப் புலோலி ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிங்கைநகர்,*
*புலோலி தெற்கு,*
*புலோலி.* (சி-44022)(38-12-16)

தகவல்:
மயில்வாகனம் (மகன்),
சந்திரன் (பேரப்பிள்ளை).



தமிழீழத்தைக் காக்கும் தற்காப்புப்பயிற்சி நேற்று பளை பொதுவிளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

## சிசுவின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.11

இறந்த நிலையில் சிசு ஒன்றின் சடலம் நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.பிறவுண் வீதியில் 5 ஆம் ஒழுங்கையிலிருந்து இந்த சிசுவின் சடலம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கண்டெடுக்கப்பட்ட சிசுவின் சடலம் பொலீஸாரினால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(எ-9-86-190)

## புலிகள் இயக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வானில் வந்தவர்கள் வழிமறித்துள்ளனர். வான்சாரதி பொலீஸ் சீருடையில் இருந்தார் என்பதானால் போராளிகள் தமது மோட்டார் சைக்கிளை நிறுத்தவேண்டி ஏற்பட்டது என்று கூறினார் புலிகளின் உடும்பன் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வீரமணி.

போராளிகளை மோட்டார் சைக்கிளில் இருந்து இறக்கிய ஆயுததாரிகள் அவர்களின் கைகளைக் கட்டிய பின்னரே சுட்டுக் கொன்றுள்ளனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்

இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களே இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்று விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையுடன் சேர்ந்து இயங்கும் தேச விரோத ஆயுதக் குழுக்களே பொறுப்பு. கொலையாளிகளின் வாகனம் காஞ்சிரங்குடா திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய இடங்களிலுள்ள விசேட அதிரடிப் படை முகாம்கள் வழியாகவே தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து 500 மீற்றருக்கு அப்பாலும் விசேட அதிரடிப் படை முகாம் ஒன்று உள்ளது. இப்படியான நிலையில் இச்சம்பவமானது விசேட அதிரடிப் படையினரின் ஒத்துழைப்புடனேயே இடம்பெற்றுள்ளது. எனவே, இதற்கான பொறுப்பை இப்பிரதேசத்தின் பாதுகாப்பிற்கு பொறுப்பான விசேட அதிரடிப் படையினர் தான் ஏற்கவேண்டும்- என்றும் தெரிவித்தார் உடுப்பன் கோட்ட பொறுப்பாளர் வீரமணி.

கொல்லப்பட்ட இரண்டு போராளிகளின் வித்துடல்களும் தங்களால் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

போராளிகள் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, திருக்கோவில் பிரதேசத்தில் தமிழ் மக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள். எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் அப்பிரதேசத்தில் கடைகள் யாவும் நேற்றுக் காலை முதல் மூடப்பட்டிருந்தன. (எ-க)

## தொண்டைமானாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கான விசேட பாதையொன்றை அமைத்து வழங்கவும் படையினர் முன்வந்துள்ளனர். அப்பகுதியில் சுமார் 500 பேர் குடியமர்த்தப்படவுள்ளனர். குடியமர்த்தப்படவுள்ள மீனவர்களை இக்கடற்பகுதியில் தொழில் புரிவதற்கு .அனுமதிக்கவும் படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்று யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ். தவரட்ணம் கூறினார்.

மீளக்குடியமரவுள்ள குடும்பங்களுக்கான தற்காலிக தங்குமிடங்களை அமைத்து வழங்க ஐ.ஓ.எம். என்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இப்பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஏற்கனவே பூர்த்தியடைந்துள்ளன என்றும் -

தங்குமிடங்களை அமைக்கும் பணிகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் இப்பகுதியில் குடியமரவுள்ள குடும்பங்களின் விவரங்களை வலிகாமம் வடக்கு மீனவர் சங்கங்களின் சமாசம் யாழ். செயலக அதிகாரிகளிடம் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-9-190)

## எமது அரசியலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்தை விமர்சிக்கும் அரசியற் கட்சியினரைத் தீர்த்துக் கட்டிவரும் புலிகள் ஜே.வி.பியினர் மீதும் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டவிழ்க்க ஆரம்பித்துள்ளனர்.

ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை ஒழித்துக்கட்ட முற்படும் புலிகளின் பயங்கரவாதத்துக்கு அடிபணிய முடியாது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் புலிகள் தமது எதிரிகளைத் திட்டமிட்டு கொலைசெய்து வருகின்றனர். அவர்களின் குரூர செயற்பாட்டுக்குப் பயந்து எமது அரசியற் செயற்பாட்டை நிறுத்தமுடியாது.

அதிமுக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு புலி உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது. ஆனால், அவர்களால் பாதிக்கப்பட்ட ஏனைய அரசியற் கட்சிகளின் பிரமுகர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை.

கந்தளாயில் எமது அலுவலகத்தை தாக்குவதற்காக வந்த புலி உறுப்பினர் வவுனியாவில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த விஜேசேகர தமிழில் நன்கு உரையாடக் கூடியவர். அவரைத் தேடி தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் எமது கந்தளாய் அலுவலகத்துக்கு வருகின்றனர். இதைப் பொறுத்துக்கொள்ளமுடியாத புலிகள் அவரைக் கொலைசெய்ய எத்தனித்தனர். எனினும் அங்கு காவற் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரின் துணிகர நடவடிக்கையால் அவர் காப்பாற்றப்பட்டார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புலிகளை ஆதரிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் பிரமுகர்களுக்கும் போதிய பாதுகாப்பை அரசு வழங்கவேண்டும். எமது அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்குஉரியதண்டனை வழங்கவேண்டும் - என்றார். (எ-க)

## நாடாளுமன்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துறையிலுள்ள பிரச்சினைகளை இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அவற்றைத்தாம் அறிந்திருக்கிறார் என ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கின் கல்விப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகாண்பதற்காக விசேட பேச்சு நடத்தப்படவுள்ளதாகவும், அதில் உடனடித் தீர்வுகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளாதது குறித்துக் கேள்வியெழுப்பிய ஜனாதிபதி, அடுத்த கூட்டத்தில் அவர் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டுமென்றும் பணிப்புரை விடுத்தார். இதனைத் தவிர நாட்டின் பல பாடசாலைகளிலும் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது குறித்தும் நேற்றைய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. (எ-க)

## வீரவன்ஸவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியப் பொலீஸார் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையை கோரியிருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் தொடர்பான அறிவிப்பை தேர்தல் ஆணையாளரிடமிருந்து எதிர்பார்க்க முடியுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதே சமயம் இந்த வழக்கில் இடையீட்டு மனுதாரராக தம்மையும் சேர்த்துக்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உயர் நீதிமன்றில் மனு சமர்ப்பித்திருப்பதைக் கவனத்திற்கொள்ளத் தேவையில்லையென்பதால் மேற்படி மனுவை வாபஸ் பெறுவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரொருவர் கூறினார்.

இதேவேளை, 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் இல்லையென்று பிரகடனப்படுத்த வேண்டும் எனக் கோரும் மனுவொன்றை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சுதந்திரக்கட்சி சார்பில் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## மூத்த பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பெண்கள் அந்த ஒடுக்குமுறைகளையும் அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்து கொண்டு வெளியே வந்து ஆயுதம் ஏந்தி- ஆண்களுக்கு நிகராக நின்று - போராடத் தொடங்கியதன் காலப் பின்னணி, சூழல் என்பன தொடர்பாகவும் -

இந்திய இராணுவத்தின் அக்கிரமிப்புக் காலத்திலும் அதற்குப் பின்னர் ஸ்ரீ லங்கா படையினருடனான போராட்டத்திலும் பெண் புலிகள் படைத்த வீரம் செறிந்த வெற்றிகள், சாதனைகள் போன்றவற்றைப் பற்றியும் மூத்த பெண்போராளிகள் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர். (த-7)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வள்ளியம்மாள் காத்தலிங்கம்

திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதியைச் சேர்ந்த திருமதி வள்ளியம்மாள் காத்தலிங்கம் அவர்கள் நேற்று (10.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காத்தலிங்கத்தின் அன்பு மனைவியும் சுபந்திராதேவி (யாழ்ப்பாணம்), இரத்தினலிங்கம் (பத்திரிகையாளர்), வசந்தாதேவி (கனடா), சந்திராதேவி (கொழும்பு), துரைலிங்கம் (இந்தியா), சசீந்திரன் (இந்தியா), செல்வச்சந்திரன் (கட்டடத் திணைக்களம், திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேந்திரன், இமாஸலராணி, நடராசன் (கனடா), ஞானசேகரம் (யாழ்ப்பாணம்), சுதாமதி (நீர்ப்பாசனத் திணைக்களம் - திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 282/2, திருஞானசம்பந்தர் வீதியில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (11.08.2005) பிற்பகல் 5 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

T.P.: 026 2227253 (சி-44024)(38-12-17)

### சின்னராசா சின்னத்தம்பி



தோப்பு, வைத்தியசாலை வீதி, அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சின்னராசா சின்னத்தம்பி அவர்கள் நேற்று (10.08.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: பாலசிங்கம் (சகோதரன்).

வைத்தியசாலை வீதி, தோப்பு, அச்சுவேலி. (38748)(38-12-17)

### செல்லையா சீவரட்ணம்



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சீவரட்ணம் (முன்னாள் கமலா சவுண்ட் உரிமையாளர், பிரபல பந்தல் சேவை உரிமையாளர்) அவர்கள் நேற்று (10.08.2005) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிறிதரன் மற்றும் கமலாதேவி, ரஞ்சன், பவானி (கனடா), சாந்தினி (சுகாதார உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2005) பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

ஏழாலை மத்தி, ஏழாலை. (38749)(38-12-17)


## சாரதி உடன் தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் சகல வாகனங்களையும் செலுத்தும் லைசன்ஸ் உள்ள சாரதி உடன்தேவை. நேரில் வரவும்.

உதயன் பத்திரிகை நிறுவனம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-44019)(38-12-17)


## மரண அறிவித்தல்

### செல்வி கீர்த்தனா வாமதேவன்



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கீர்த்தனா வாமதேவன் (மாணவி, யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - க.பொ.த. உயர்தரம் - 2007) அவர்கள் 08.08.2005 அன்று அகாலமரணமானார்.

அன்னார் வாமதேவன் - நகுலேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் நிலக்ஷியின் (மாணவி - யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தரம் - 8) அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகராசா அன்னலட்சுமி (பெரியபிள்ளை), காலஞ்சென்ற முருகேசு நடராசா, சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். இலகுநாதன், வேதாட்சனநாயகி (Kentravels Colombo), பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற மாநகரசபை ஊழியர், பிரத்தியேக ஆங்கில ஆசிரியர்), ஞானேஸ்வரி, சிவகுருநாதன், இராஜேஸ்வரி (Germany), ஸ்ரீநிவாசன், யசோதா (France) ஆகியோரின் பெறாமகளுமாவார். நடராசா நந்தகுமார் (பொறியியலாளர், U.S.A.), கீதா, திருமதி தயாநிதி, நளாயினி, ரவிக்குமார் (London) ஆகியோரின் மருமகளும் Dr.சுதர்ஷினி பரமேஸ்வரன் (யாழ். போதனாவைத்தியசாலை), புராதனி (கவிதா) (B.sc. London), இமாதினி (மாணவி, யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), Dr.ஜீவகன், Dr.சுதர்சன் (Germany), தங்கீதா, டிலீசன், நிரோசிகா, மிசாரிகா ஆகியோரின் உடன்பிறவாசகோதரியும் சுரேஸ்குமார், வாசுகி (பிரான்ஸ்), கபில் (France) பாரதிதாசன், கௌதமன், காயத்திரி, முகேஸ்குமார், சுஜீவ், ஆரபி, அபிரா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச.வாமதேவன் (அதிபர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்) T.P:- 0777163904

109, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (38747)(38-12-17)


## தரம் - 5

இறுதி மாதிரிப் பரீட்சையும் கருத்தரங்கும்

20 ஆந் திகதி நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சைக்கான முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் அடங்கிய

இறுதி முன்னோடிப் பரீட்சை - 5

கருத்தரங்கு

நல்லூர் சயன்ஸ் அக்கடமியில்

(நல்லூர் கோயில் முன்பாக)

சனி, காலை 9 மணிக்கு (13.08.2005) உங்கள் பிள்ளைகளைத் தவறாது கலந்து சித்திபெறச் செய்யுங்கள்.

ஆக்கம். திரு.கணேசலிங்கம் (Bed,Hons)

(I.S.A. திருமலை N.S.A பிரதம பரீட்சை மதிப்பீட்டாளர்]

பதிவுகள் இன்றும், நாளையும் மட்டும் ஏற்கப்படும். பாடசாலைகளில் பரீட்சை எழுதுவோர் உங்கள் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

வினாப்பத்திரங்களை பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். (38719)(38-12-17)

மேலதிக விவரங்களுக்கு - 077 3126807


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.